[illegible]
V 2 [illegible]
Cat 1929

JL
R673 [illegible], N28
N29.2.10.
187136

"SIDDHANTHAM"
Vol. 2—No. 10.

ஓம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| | | |
|---|---|---|
| மலர் உ | சுக்கில ஆண்டு ஐப்பசித் திங்கள்<br>1929 ஞு அக்டோபர்மீ | இதழ் கo |

உள்ளுறை — பக்கம்

வீணர்கள் வீடு … … … உசரு
சர்தார் வல்லபாய் படேல் சொற்பொழிவு … உசக
தலைமைப் பேருரைமேல் நிகழ்ந்த
சில தடைகளுக்கு விடை … … உளு
யோகம் … … … உஅo
விறகிற்றீயினன் … … … உஅரு
பெண்ணடியவர் மூவர் … … … உகரு

OFFICE ... 10 OCT 1929

ஆசிரியர் :—ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், B. A., B. L.
உதவி ஆசிரியர் :—வல்லை. பாலசுப்பிரமணியன், B. A.

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

1929

# சுந்தரர்

சைவ சித்தாந்த மகா சமாஜத்தினர் சுந்தரர் தேவார [illegible] ங்களை அ[illegible] அடக்கவிலைக்கு வழங்குகின்றனர். நேரில் வருவோர் நான்கணு தநது தனிப்பிரதி பெறலாம். மொத்தமாக ரூபாவுக்கு ஐந்து பிரதிகள் வீதம் பெற்றுக்கொள்ளலாம். முன்பணமாக அனுப்புவோருக்கு 25 பிரதிகட்கு மேற்பட்டால் ரயில்வே பார்சலாகப் புத்தகங்கள் அனுப்பப்படும். முன்பணம் அனுப்புவோர் புத்தகக் கிரயத்தோடு பார்சல் கட்டும் செலவிற்கும் ரயில்வே ரசீதனுப்பத் தபாற் செலவிற்கும் 2 அணு சேர்த்தனுப்ப வேண்டும். ரயில்வே ரசீது கிடைத்தவுடன் பார்சலை ஒப்புக்கொள்ளா விட்டால் ரயில்வே கம்பெனிக்கு டிமரேஜ் கட்டணம் கட்டநேரிடும். ரயில்வே பார்சலைப் பெற்றுக் கொண்டதை ஒவ்வொருவரும் தயவு செய்து காரியதரிசிக்குத் தெரிவிக்கவேண்டும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தனிப்பிரதி (பார்சல் செலவு, வி. பி. அல்லது ரிஜிஸ்தர் செலவுள்பட) | | | ரூ. | 0 | 8 | 0 |
| 5 பிரதிகள் | ஷை | ஷை | ,, | 1 | 9 | 0 |
| 10 ,, | ஷை | ஷை | ,, | 2 | 15 | 0 |
| 25 ,, | ஷை | ஷை | ,, | 6 | 14 | 0 |
| 50 ,, | ஷை | ஷை | ,, | 13 | 8 | 0 |

ஷை ஐம்பது பிரதிகளைத் திருநெல்வேலிக்கு ரயில்வே பார்சலில் அனுப்ப மொத்தச் செலவு 11-2-0. ரயில்வே ஸ்டேஷனில்லாத உள்நாட்டு ஊர்களிலிருப்போர் ரயில்வே ஸ்டேஷனுக் கருகிலுள்ள நண்பர் விலாசத்துக்கு அனுப்பும்படி செய்தல் நலம். மூன்று நான்கு அன்பர்கள் சேர்ந்து ஒரே பார்சலாகப் பெற்றுக்கொள்வதும் நலம். இப்பிரதிகள் வெளிவந்தது முதல் மிக விரைவாய் செலவாய் வருகின்றன. ஆகவே புத்தகம் தேவையுள்ளவர்கள் விரைந்து கீழ்வரும் விலாசத்துக்கு முன்பணம் அனுப்புவார்களாக.

150, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, சென்னை, 10-10-29.

**ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார்,**
காரியதரிசி, சைவசித்தாந்த மகா சமாஜம்.


## ஒரே மாதம் வரையில் ரூபா 5-14-0.

ஓர் உண்மையான கிராமபோன் என்ன விலைக்குக் கிடைக்கிறது பாருங்கள். பிக்மி




போன் என்று சொல்லப்படும் **சிறிய சைஸ் கிராமபோன்.** இது 200, 300 விலையுள்ள பெரிய கிராமபோன்களுக்கு இணையாக வாசிக்கக்கூடியது. இதன் இயந்திர அமைப்பு பெரிய கிராமபோனைப் போலவே உள்ளது. இந்த கிராமபோன் பெட்டியில், சவுண்டு பாக்ஸ், ஆரன், இரண்டு டஜன் கொண்ட ஊசிப் பெட்டி எல்லாம் உண்டு. இரண்டு பக்கமும் பாடக் கூடிய ஒரு ரிக்கார்டும் இனமாகச் சேர்த்தனுப்பப்படும். இங்கிலீஷ் பாண்டுகள், சிரித்தல், விகடம் பேசுதல் முதலிய ரிக்கார்டுகள் தயாரிலுள்ளன. தனி ரிக்கார்டு 1-க்கு ரூ. 1. ஒரு ரிக்கார்டுடன் கிராமபோன் பெட்டி 1-க்கு ரூ. 5-14-0. தபால் செலவு ரூ. 1. உடனே எழுதுங்கள்.

*Sole distributors,* **Canadian Watch People,** G. P. O. Madras.



## எங்கள் விசேஷ குறைந்தவிலை விற்பனை

### 22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக் கெடியாரங்கள்




இதிற் கண்டபடி எந்த ஷேப் வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம்போல் இருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச் சங்கிலி இனமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். 5 வருஷம் உத்திரவாதம். ரூ. 4-15-0. வி. பி. வேறு.

ஜினான் வாட்சு கம்பெனி,
மிண்டு பில்டிங் போஸ்டு, மதராஸ்.

ஓம்

# சித்தாந்தம்

" ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு "

| மலர் ௨ | சுக்கில ஆண்டு ஐப்பசித் திங்கள்<br>1929 ஆம் அக்டோபர்மீ | இதழ் ௧௦ |
|---|---|---|


## வீணர்கள் வீடு

[பத்திராசிரியர்]

சுயமரியாதை இயக்கத்தால் தமிழ் நாட்டுக்குப் பொதுவாகவும் மாணவர்கட்குச் சிறப்பாகவும் விளையும் தீங்குகளைப்பற்றிப் பல பிரமுகர்கள் பல மேடைகளினின்றும் பல பத்திரிகைகள் வாயிலாகவும் அவ்வப்போது அறிவித்து வருகின்றனர். அவற்றைக் கண்ணுறும் "சுயமரியாதை வீரர்கள்" தங்கள் விஷமப் பிரசாரத்தின் பலனாக நாடு கெடுவதை ஒரு சிறிதும் கவனியாது தங்கள் வயிற்றுப் பிழைப்புக்காகவோ, பதவி வேட்டையில் வெற்றிக்காகவோ அவ்வகைப் பிரசாரத்தை விட்டு விடாது நடத்தி வருவதுபோல் பாசாங்கு செய்து வருகின்றனர். இவர்கட்கு ஒரு சிறிதும் அஞ்சாது, கடவுள் ஒருவரையே வணங்கி, நாட்டின் நலன் ஒன்றையே கருதி, ஒழுக்கச்சீலம் வாய்ந்த பெரியோர்கள் இவ்வுண்மைகளை எடுத்துரைப்பின், இவ்வீரர்கள் வெகுளியாம் வெங்கராவினால் விழுங்கப்படுகின்றனர். உடனே அப்பெரியார்கள் மீது இவர்களது வசைமொழி பாணங்கள் சரமாரியாகச் செல்கின்றன. அப்பெரியார்கள் இவ்வசைமொழிகட்கு ஒரு சிறிதும் அஞ்சாமல் தங்கள் உண்மை விளக்கத்தைப் போதிய சான்றுகளால் நிலைநாட்டி, இவ் வசைமொழி வேந்தர்களைப் பொருட் படுத்தாமலும் மதியாமலும் அமர்கின்றனர். ஆனால் இவ் வீணர்களோ தங்கள் வசைமொழிக் கட்டுரைகளால் உண்மையை நிலைநாட்டி விட்டதாகவோ அல்லது தங்கள் இயக்கத்தைப் பரப்பி விட்டதாகவோ எண்ணி இறுமாந்து இன்புறுகின்றனர். இந்நிலையே இவர்களுக்கு

வையகத் துறக்கமாகி உள்ளது. இதையே ஆங்கிலப் பெரு மக்கள் "வீணர்கள் வீடு" (Fools' paradise) என்று கூறுவர்.

சுயமரியாதை இயக்கத்தில் வேதவாக்கெனக் கருதப்படும் உண்மைகளெனக் கீழ் வருவனவற்றை ஒருவாறு தொகுத்துக் கூறலாம் :—தமிழ் நாட்டிலுள்ள எல்லாப் பார்ப்பனரல்லாத மக்களும் இவ்வியக்கத்தைச் சேர்ந்தவர்கள். ஒரு பார்ப்பனரல்லாத தனவான் ஒருதேர்தலில் தனக்குச்சுயமரியாதை இயக்கத்தில் ஒரு சிறிது அநுதாபமும் கிடையாது என்று அச்சடித்து விளம்பரம் செய்து வெற்றி பெற்றாராயினும் சுயமரியாதைப்பத்திரிகைகள் தங்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்று அவரைக் கூறினால் அப்பத்திரிகைகள் கூறுவது உண்மையல்லவென்று சொல்ல அவருக்காவது தமிழ் நாட்டினருக்காவது உரிமை என்பதில்லை. இவ்வியக்கத்தைச் சேர்ந்தவர்களே மனிதர்கள், அறிவாளிகள், ஒழுக்கச் சீலர்கள், கருணை வள்ளல்கள், ஆண்மையுடைய சிங்கங்கள், தன்னலம் கருதாது தொண்டு புரியும் தலைவர்கள். இவ்வியக்கத்தைச் சேராதவர்கள் விலங்குத்தன்மையினர், அறிவிலிகள் அல்லது மந்த புத்தியினர், ஒழுக்கமற்ற துஷ்டர்கள், இரக்க மற்றவர்கள் பேடித்தன்மையினர், காலிகள், கூலிகள், வயிற்றுப் பிழைப்புப் பிரசங்கிகள். இவ்வியக்கத்தினர்கூறுவதே இவ்வுலகத்திலுள்ள பேரறிஞர்கள் கண்டு, உண்ட, திரண்ட ஞானமிர்தம், மாக்களும் அநுசரிப்பதற்குரியதென திராவிடப்புலவர் சில மாதங்கட்கு முன் பறையறைந்த சமரச சன்மார்க்கம். இவ் [illegible]று

18136

பட்ட கொள்கைகளும் வரலாறுகளும் முழுப் பொய்கள், பார்ப்பனப் புரட்டுகள், மண்ணெண்ணெய் விட்டுக் கொளுத்தப்பட வேண்டியவைகள், போலிச் சைவம், வேற்றுமை துன்மார்க்கம் முதலிய நெறிகளைச் சேர்ந்தவைகள். உதாரணமாக ஞானசம்பந்தன் கொலைபாதகனென்றும் சீதை கற்பிழந்தவள் என்றும் இவர்கள் ஆராய்ந்து முடிவுகூறிவிட்டால், ஞானசம்பந்தனேவந்து குற்றவாளியல்லவென்றாலும், சீதா பிராட்டியாரே தோன்றி தாம் கற்புடைய மங்கையேயென்று காய்ச்சிய நெய்யில் கைவிட்டாலும் அவைகள் பார்ப்பனப்புரட்டுகள், மூளைக் குழப்பத்தினால் உண்டாகும் தோற்றங்கள் அன்றி வேறல்ல என்று கூறுவதுதான் அறிவுடைமை. தமிழ் நாட்டின் சீர்கேடான நிலைக்குக் காரணம் பார்ப்பனச் சூழ்ச்சியே தவிர வேறல்ல. உதாரணமாக ஆயிரக்கணக்கான குழந்தைகட்குக் குடிப்பதற்குப் பசும்பால் கிடைக்காததின் காரணம் சுயமரியாதை வீரர்களும், கடிதம், மை, அச்சியந்திரம், ஆகாயவிமானம், ஆகாயத் தந்தி, ஆகாயாயில் முதலியவைகளைக் கண்டுபிடித்த மேல்நாட்டுப் புலாலுண்ணும் காருண்ய வள்ளல்களும் கோடிக்கணக்கான பசுமாடுகளைக் கொன்று தின்பதல்ல. பார்ப்பனச் சூழ்ச்சியால் உண்டாகிய கோயில்களில் நடக்கும் பாலபிஷேகமே இதற்குக் காரணம். இவ்வாறே விளக்கிச் செல்லலாம். விரிவஞ்சிவிடுக்கின்றோம்.

இத்தகைய உண்மைகளை மதிற்சுவர்களாகவும் சுய இறுமாப் பென்னும் ஆணவமலவிருளை ஆகாயமாகவும் கொண்டது நாம் மேற்கூறிய இவ் வீணர்கள் வீடு. "வெள்ளத்துள் நாவற்றி எங்கும் விடிந்திருளாம், கள்ளத் தலைவர் கடன்" என்ற வாக்குக்கிணங்க எங்கும் விடிந்திருந்தும் இவ் வீடு இருண்டே எஞ்ஞான்று மிருக்கும்.



சென்ற மாதத்தில் மகாராஷ்டிர தேசத்திலிருந்து ஒரு பெரியார் தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்தனர். அவர் பார்ப்பனரல்லாதார். பார்ப்பனரல்லாத ஒரு மகாத்மாவின் சீடர். அவர் வயிற்றுப் பிழைப்புக்காகவோ, பதவி வேட்டைக்காகவோ பொதுஜன ஊழியஞ்செய்யமுன்வந்தவரல்லர். போதிய அறிவும், ஆற்றலும், ஆராய்ச்சியும் உடையவர். பார்ப்பனர்களுக்காகப் பரிந்து பேசவேண்டும் என்ற அக்கறையும் அவசியமும் ஒரு சிறிதுமில்லாதவர். லக்ஷக்கணக்கான பார்ப்பனரல்லாத மக்களால் தமது நாட்டிலே உண்மைத்தலைவராக எண்ணப்படுபவர். அவர் பெயர் சர்தார் வல்லபாய் படேல் என்பதே. அவர் இத்தமிழ் நாட்டில் உலவும் சுயமரியாதை இயக்கத்தைப்பற்றித் திருப்பூரில் செய்த சொற்பொழிவின் முக்கிய பகுதிகளை அடுத்தகட்டுரையாக வெளியிட்டுள்ளோம். அதிலிருந்து நமதுநாட்டுச்சுயமரியாதையை அடுத்த நாட்டிலுள்ள நமது பார்ப்பனரல்லாத சகோதரர்கள் எவ்வாறு கருதுகின்றனர் என்று ஒருவாறு உணரலாம். நமது சகோதரர்கள் வழக்கம்போல் அவர்மீது தங்கள் வசைமொழிப் பாணங்களை விட்டனர். ஆனால் உண்மை தேசத்தொண்டு என்று அவர் அணிந்திருந்த கவசம் அப்பாணங்களை மழுங்கச் செய்தனவேயன்றி அவரை அப்பாணங்கள் எவ்வகையிலும் பாதிக்க முடியவில்லை. முழு வெற்றியே அவருடையதாயிற்று.

இது நிற்க, காருண்யம் நிறைந்த அறிஞர் ஒருவர், நாம் சென்ற விதழில் வெளியிட்ட "சைவக் குறும்பை"த் துருவி ஆராய்ந்து ஐந்து பத்திகளடங்கிய கட்டுரையொன்றை "குடியரசு" பத்திரிகையில் வெளியிட்டுள்ளார். "சித்தாந்தம்" ஆசிரியரின் சூன்ய நிலையை விளக்க முயலும் இவ்வாசிரியர் தமது மகா சூன்ய நிலையையும் தமது வாசகர்களின் மகாமகோன்னத சூன்ய நிலையையுமே விளக்கி விட்டனர். நமது பத்திரிகையை "நூற்றுக்கணக்கானவர்கள்" வாங்கத் தொடங்கி ஆதரவளித்து வருகின்றனர் என்பதிலிருந்து இவர் ஓர் ஆகாயக்கோட்டை கட்டுகின்றார். தமிழ் நாட்டில் நடைபெற்று வரும் மாதப் பத்திரிகைகள் தங்கள் இரண்டாவது ஆண்டில் எத்தனை சந்தாதாரர்களைப் பெற்றிருந்தனவென்பதையும், சுயமரியாதைப் பத்திரிகைகளின் சந்தாதாரர்கள் எண் "தேசபந்து" முதலிய பத்திரிகைகளின் எதிர்ப்பின் காரணமாக எவ்வாறு மாறியிருக்கிறதென்பதையும், இக்கட்டுரையாசிரியர் சுயமரியாதை உண்மையாக நினையாது, உண்மையான உண்மையாகக் கூறுவாரானால் நாமும் நமது கணக்கைக் கூறுவோம். அச்சுப்பிழையொன்றை அடிப்படையாகக் கொண்டு நமது "நாத்திகத் தியானத்தடிப்பை" வலியுறுத்துவது நகையையே விளைக்கும். இத்தகைய அச்சுப் பிழைகளை சுய மரியாதைப் பத்திரிகைகளில் ஆராய்வது மணற் சோற்றில் கல்லாராய்வதையே ஒக்கும். மாணவர்களைத் தண்டிப்பதை சமணர் கழுவேறி

யதற்கு ஒப்பிடுவது பேதமையே யாகும்.

“ தந்தைதாய் பெற்றதத்தம் புதல்வர்கள் தஞ்சொலாற்றின்
வந்திடா விடிலுறுக்கி வளாரினா லடித்துத்தீய
பந்தமு மிடுவரெல்லாம் பார்த்திடிற் பரிவே யாகும் ”

என்ற “எங்கள்” சித்தியார் வாக்கு “நாங்கள்” விதிக்கும் தண்டனைகள் காருண்யச் செயல்களே யென்கிறது. ஈரோடு பெரும் பட்டினமல்ல, சென்னை ஒரு மூலையல்ல வென்பதைத் தவிர தஞ்சம்புகுந்ததற்கு வேறு பதிலொன்றும் இறுக்க இயலாமற் போனதும் இயல்பே. மகாதேவன் மலையளவு மாமிச முண்டதும், பன்றியின் சைவமும், மந்திரி வழிபாட்டின் மேன்மையுமே இவ்வாசிரியர்புத்திக்கு எட்டுவன போலும்! இவரோ வடலூரார் பேச்சை எடுப்பது! சுயமரியாதைத் தலைவர் சுயமரியாதை என்னும் “சமரச சன்மார்க்கத் தனிச் செங்கோல் ஓச்சுகின்றார்” என்பது சென்னையில் எந்த மூலையில் எத்தனை அடி அகல நீளமுள்ள அறையிலிருந்து கொண்டே யென்றும், இவ்வாறு அத்தலைவரை முகமன் கூறிப் புகழ்வதால் இக்கட்டுரை யாசிரியருக்கும் இவர் உறவினர்கட்கும் எவ்வளவு ஊதியம் கிடைக்கிறதென்றும் இவர் கூற முன்வருவார் என்று எதிர் பார்க்கிறோம்.

சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் போல நடிக்கும் இத்தகைய வீணர்கள் ஆராய்ச்சிக் கட்டுரைகளை நாம் எப்போதும் பொருட்படுத்தியதுமில்லை, பொருட்படுத்தப் போவதுமில்லை. ஆனால் உண்மைக்கு மாறானவைகளை உண்மை போலத்திரித்துக் கூறுங்கால் உண்மையை உள்ளவாறே விளக்குவது நமது கடனாகின்றது. “பொய்யுடை யொருவன் சொல்வன்மையினால், மெய்போலும்மே மெய்போலும்மே” “மெய்யுடை யொருவன் சொல மாட்டாமையால் பொய் போலும்மே பொய் போலும்மே” என்பன உண்மை வாக்குக்களாகையால் நாம் உண்மையை விளக்காதொழிய முடியவில்லை. ஆயினும் இவ்வியக்கத்தினர் கூறுவதில் கடுகளவு உண்மையும் காண்பதரிது என்று தமிழ்நாட்டினரும், நமது வாசகர்களும், உண்மைச் சைவர்களும், தங்கள் அனுபவத்தில் நன்குணர்ந்துள்ளார்களாகையால், இது முதல் இவ்வியக்கத்தினர் கூறுவதைப் பொருட்படுத்தி நாம் எழுத வேண்டிய அவசியம் நேரிடாது என்று எதிர்பார்க்கிறோம். நாம் உண்மையென்று வெளிப்படையாக ஒப்புக் கொள்ளாதவரை இவ்வியக்கத்தினர் கூறுவதெல்லாம் பொய்யே யென்று கருதுமாறு தமிழ்நாட்டினரையும் உண்மைச் சைவர்களையும் நமது வாசகர்களையும் வேண்டிக் கொள்கிறோம்.

---

[இவ்வாண்டு டிசம்பர்மீ நடைபெற விருக்கும் நம் சமாஜ ஆண்டு விழா, அதை யொட்டிய சைவர் மகாநாடு இவைகட்குத் தலைமை வகிக்கும் தகுதி யுடையார் மூவர் பெயரையும், அம் மகா நாட்டில் தாங்கள் கொண்டுவர எண்ணியுள்ள தீர்மானங்களையும் எழுதி திருப்பாதிரிப் புலியூர் சைவர் மகாநாட்டு 1—4 வரை உண்மைகளை ஒப்புக்கொள்ளும் நம் சமாஜ அங்கத்தவரும் சைவ சபைகளும் 25-10-1929-க்குள் அனுப்புமாறு வேண்டுகிறோம்—**காரியதரிசி.**]

# சர்தார் வல்லபாய் படேல் சொற்பொழிவு

[கே. வேங்கடாசலம் மொழிபெயர்த்தது]

### சென்னையில் தீய நிலை

சென்னையில் அடிவைத்த வுடனே யான் உட்கொள்ளும் காற்றிலும் வகுப்புவாத மென்னுங் கொடியவிடங் கலந்திருக்கக் கண்டு கொண்டேன். பதவி வேட்டைகளில் பற்றற்ற வெளிநாட்டானாகிய என் போன்றார் அவ்வாறு உணருங்கால் இப்பெரு மாகாண மக்களின் நிலைதானென்னே யென்றறிய இயன்றவரை முயன்றுளேன். இப்பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் பிணக்கு மிக்க தீமையை விளைவித்துள்ள தென்பதை மறுப்பவரிலர். இங்கு ஒருவருக் கொருவரிடம் வெறுப்பு, நம்பிக்கைக்குறைவு, பொறாமையாகிய பெருங் குணங்கள் பொங்கித் ததும்புகின்றன. பார்ப்பனர், பார்ப்பன ரல்லாதார் தங்களுடன் போட்டியிடின் தங்கள் நிலை என்னாமென எண்ணி எண்ணி ஏங்குகின்றனர். அவர்கள், “ உத்தியோகம் வகிப்பதோ, வைத்தியமுறை, வக்கீல் தொழில் ஆகியவைகளில் பதவி பெறுவதோ தவிர வேறொன்றும் யாங்களறியோம்; அவைகளிலும் பெருந்தொகையினரான பார்ப்பன ரல்லாதார் போட்டியிட முன் வந்திடின் எங்கள் குடிகெட்டது ” எனக் கதறுகிறார்கள். பார்ப்பன ரல்லாதாரோ, உத்தியோகங்களையும் மற்றப் பதவிகளையும் பார்ப்பனர்களே நெடுங்காலமாக சுதந்தரத்துடன் ஆண்டுவருவதினால், தங்களுரிமைகள் மறுக்கப்பட்டதாகக்கருதுகிறார்கள். ஆகவே இயற்கையில், அவர்கள், பார்ப்பனர்களுடன் போட்டியிட விரும்புகின்றார்கள். இப்போட்டியியக்கம் நேர்மையானதா யிருக்குமாயின் எனக்கும் அதனிடத்தில் பற்றுண்டு.

**வகுப்பு வாதத்தினால் விளையுந்தீமைகள்:**- ஆனால் இவ்வியக்கத்தைத் தோற்றுவிப்பதற்கு எத்தகைய காரணங்கள் முன்னின்றதேனும், இவ்வியக்கம் அவ்விரு வகுப்பாருக்குமிடையே ஒரு பெரும் பிளவை யுண்டாக்கி விட்டதென்பதையும் வகுப்பு வெறுப்பை வளர்த்துள்ள தென்பதையும் ஒருவராலும் மறைத்தற் கியலாது. ஐயமுடையோர் சில தமிழ்ப் பத்திரிகைகளைக் கண்ணுறுவாராக. அவைகள் பெருந்தன்மையுடைய மக்களென்று கூறிக்கொள்ளும் ஒரு வகுப்பாராலும் வாசிக்கப்படத் தக்கனவல்ல. அம்முறையில், மக்களைப் பத்திரிகை மூலமாகப் பயிற்சி செய்யவோ, அறிவுறுத்தவோ முயலுவோர், தாம் ஒரு பெருங் காரியத்தை முடிக்கக் கங்கணம் கட்டிக் கொண்டனரென்பதை உணரட்டும். அம்முறைகளால் அவ்விரு வகுப்புகளும் என்றும் பிரிந்து நிற்கும்படியான நிலை ஏற்பட்டு விட்டது. மேலும் இந்நாட்டிளைஞர்கள் அம்முறைகளில் பயிற்சி செய்யப்பட்டார்களாயின் நிலைமை மிக்க கேவலமானதாகி விடுமென்பதில் சற்றும் ஐயமில்லை. ஆகவே யான் எனது கொள்கைகளை யான் சந்திக்கும் ஒவ்வொரு கூட்டத்தாரிடமும் சமயம் நேரும்போதெல்லாம் முன் வைக்கப் பின் வாங்குவதில்லை. இத்தகைய நிலையில் யாதொரு நிர்மாண வேலையும் செய்ய முடியாதென்பதையும், பொது நிலைக் கழகங்களெல்லாம் வகுப்பு

வாதமென்னும் விடத்தைப் பரவச் செய்யுமிடங்களாயுள்ளன வென்பதையும் வருத்தத்துடன் உங்களிடம் யான் தெரிவித்துக் கொள்கின்றேன். பொதுநிலைக் கழகங்கள் மட்டிலல்ல, அவைகளினூடே பல துறைகளிலும் முக்கியமாக ஆரம்பக் கல்வியின் பொறுப்பை ஏற்ற ஆசிரியர்களிடத்திலும் அக் கொடியவிடம் சென்றுள்ளது. என் போன்றார், அத்தகைய கல்வியின் விளைவை யோசிக்குமிடத்து இடியொலி கேட்ட அரவெனத் திடுக்கிட்டயர்வர்.

**மணவினை மாறுதல் :**—அவர்கள் மதத்திலுங் கை வைத்து விட்டனர். மனித வாழ்க்கையின் அடிப்படையான மதத்தைக் கெல்லுவோர், அதன் விளைவை நுகராமற் போகார். இந்நாட்டுப் பெண்மணிகளைப் பற்றிக் கூறுமிடத்தேனும் அவர்கள் அடக்கத்துடன் வரைதல் வேண்டாமா! ஒரு வகுப்பைச் சீர்திருத்த முயலுமுன், மரியாதையுடன் பேசக் கற்றல் அவசியமானது. பழிச் சொற்களால் பயனடைந்தோர் யாவர்? சமூகச் சீர்திருத்தக்காரர்களிடம் எனக்கு வெறுப்பில்லை என்பதை நீங்கள் திட்டமாக அறிவீர்களாக. பண்டை நாள் தொட்டுக் கையாளப் பட்டுவரும் மணவினை முறைகளை மாற்றி, நான்கு விநாடிக்குள்ளே நான்கணாச் செலவிலேயே மணவினைகளை நிறைவேற்ற ஒருப்படுவார்களாயின் அவர்களிடம் எனக்குச் சச்சரவில்லை. அவ்வாறு செய்தல் சுலபமானதல்ல வென்பதை அவர்கள் சீக்கிரமே உணர்வர். மதப்பற்றுடைய ஒருவரும் மணவினையைப்பற்றி இவ்வாறு இழிவாகக் கருதார். திருமணம், சிலநா ளனுபவிக்கும் ஓர் உரிமையாகக் கருதப்படும் வழக்கம் இந் நாட்டிலில்லை. அதனை வேசித் தொழிலென மதித்தல் ஒவ்வாது. அத்தியாவசியமான அவ்வினை முறைகளை இழித்துக் கூறுவோர் தங்கள் பெற்றோர் மீது பெரும் பழி சுமத்துபவரே யாவர். ஏனெனில் அவர்கள் தம் பெற்றோர்களும் அவ்வழக்கத்தை மேற் கொண்டார்க ளென்பதையும், நமது முன்னோர்கள் பல்லாண்டுகளாக அவ்வினையை மிக்க பரிசுத்தமான தென மதித்து வந்தன ரென்பதையும் மறத்தல் கூடாது.

இவ்வினை நிகழ்த்துழி பார்ப்பன குருக்களை ஒழித்திடின் எனக்கு முக்காலுஞ் சம்மதமே. எவ்வாறாயினும், பலராலும் பாராட்டப்பட்டுவரும் ஒரு வித வினை முறைகளை மேற்கொண்டுதான் ஆகவேண்டும்; இன்றேல் அரசாங்கம் ஏற்படுத்தியுள்ள பதிவு முறைகளைக் கைக்கொண்ட பின்னர்தான் உங்கள் திருமணத்தைச் சட்டம் ஒப்புக்கொள்ளும். பொய்ம்மைமணங்களை நீங்களெவ்வாறு மறுத்தற்கியலும்? தெருவிலலையும் ஒரு சோம்பேறி கூடக் கௌரவம் பொருந்திய ஒரு கனவான் தன் பெண்ணை மணந்து கொண்டதாகக் கூற முன்வர வழியுண்டன்றோ? நீங்கள் நினைப்பது போல் ஏதோ நான்கு விநாடிகளில், இரண்டொரு சாட்சியங்களைக் கொண்டே மணவினைகளைநடத்திவிடலாம். ஆனால் மக்கள் சமூகத்தைப் பாதிக்கும் இக் காரியங்களில் ஆழ்ந்தயோசனை செய்த பின்னரே இறங்கவேண்டும். பொறுப்பு வாய்ந்த தலைவர்களெல்லாம் இதுபற்றி மௌனம் சாதிப்பது வருந்தத் தக்கது. இது ஒரு குறித்த காரியத்திற்கு உதவி பயக்கலாமேனும், இதன்



விளைவை நீண்ட காலங்களிலேயே நாம் அறிதல் கூடும்.

நீங்கள் பார்ப்பனரை வெறுக்குங்கால், மிகுதியுந் தூய்மையான பல வழக்கங்களையுங் கெடுக்க முயலுகின்றீர்கள். அதன் விளைவு உங்கள் தலையில் தான் விடியும். நீங்கள் திருமணத்தின் தூய்மையை உதறுதல் கூடும்; விதவா விவாகத்தைப்பற்றி விளம்புதல் கூடும்; மண ஒப்பந்த நீக்கத்தை நீங்கள் விரும்புதலுங் கூடும். இம் மூன்று முறைகளையும், முன்னனுபவமும், சட்டத்தின் பக்க பலமுமில்லாத மக்களிடை மேற்கொள்ளுமாறு வற்புறுத்தலாம். தலைவர்கள் இவைகளை இந்நிலையில் கண்டிக்கவியலாது. ஆனால் அறிவுடை மக்கள் இவைகளை எவ்வாறு போற்றுகின்றனரோ அறியேன்.

**மதநிந்தனை :**—தாம் மேற்கொண்ட மதத்தைப்பற்றிக் கூறும் அவதூறுகளை அறிவுடையோ ரெவரும் கேட்கவும் பொறார். இத் தொல்லுலகில் மதத்தின் பெயரால் பல மூடக்கொள்கைகள் பரவியுள்ளன வென்பதை ஒருவரும் மறுத்தற்கியலாது. பல விடங்கள் சீர்திருத்தம் பெறவேண்டுமென்பது உண்மையே. அம்முறையில் நம்மனைவருக்கும் வேலை யளிக்கத் தக்க விடங்களுள்ளன. ஆனால் மதத்தின் அடிப்படைகளைக் கெல்லுவதாகக் கூறுவது மடமையேயாகும். இம்மாகாணத்தின் இந்நிலையிலேற் பட்டுள்ள தொல்லைகளெல்லாம் மதத்தைப்பற்றியதோ, சமூகப் பழக்க வழக்கங்களைப் பற்றியதோ வல்லவென்றும், மக்களின் வறுமையையும், உண்டிச் சுருக்கத்தையும் பற்றியதென்றே யான் அறிந்தமட்டில் தோன்றுகின்றது.

**உண்மைச் சுயமரியாதை :**— யான் பதவி வேட்டைகளுக்கு விழைவோர்களை யழைக்கவில்லை; பயிர்த்தொழில் புரியும், செய்தொழிலிற் குற்றமற்ற காராளர்களையே யுத்தமுனைக்கு வருமாறு யான் அறைகூவி யழைக்கின்றேன். அவர்களில் மனத்தளர்ச்சியோ, கோழைத்தனமோ வுடையவர்க ளொருவருமிரார். அவர்கள் போர்முனையில், பெருமையுடன் உயிர்விட அறிவார்கள். அவர்களறியாராயினும், யான் அவர்களுக்கு அவ்வழிகளைக் கற்பிப்பேன். அவர்களுக்கே யான் உண்மைத் தன் மதிப்பைக் கற்பிக்க விரும்புகின்றேன். உடன்பிறந்த சோதரனை வெறுத்தல் என் சுயமரியாதைக்கு முரண்பட்டதென்பதை அவர்கள் அறிவார்களாக. கொடுங்கோன்மையை நீடித்துநிற்கச் செய்தல் என் தன் மதிப்புக் கொள்கைக்குப் புறம்பானது. அவர்களை அவ்வழிகளில் நீங்கள் நடத்துவீர்களாயின், உங்களிடம் யாவற்றையும் ஒப்படைத்து, உங்கள் போர்வீரனாகவும் பணியாளனாகவும் ஆவேன் என்பதை நீங்கள் உறுதியுடன் நம்புங்கள். ஆனால், அம்மேழிச் செல்வர்களை முரண்பட்ட வழிகளில் நீங்கள் இழுத்துச் செல்ல ஒருகாலும் யான் ஒருப்படேன். யான் கூறுவன வெல்லாம் உண்மை யென்று நீங்கள் உணர்வீர்களாயின், உங்கள் பிணக்குகளை யெல்லாம் இன்றே ஒழியுங்கள். வெளிநாட்டுப் பார்ப்பனர்களால் நீங்கள் சமமாக எண்ணி நடத்தப் படுகிறீர்களாவென இங்குள்ள பார்ப்பனர்களையும், பார்ப்பனரல்லாதார்களையும் யான் கேட்கின்றேன். அவர்கள் பிறநாட்டுப் பார்ப்

னர்களிடை எவ்வாறு நடந்து கொள்ளுகின்றார்க ளென்பதை யான் கண்ணாரக் கண்டுளேன். 'பார்ப்பனன் பிறப்பினால் உயர்வு கொண்டாடுகிறான், ஆதலின் அவருடன் போராடுவதே யன்றி வேறொன்றையும் இப்போது நோக்கோம்' என்று என்னிடங் கூற வேண்டாம். கற்றறிந்த சிலர், அவ்வாறு செய்வதைப் பற்றி எனக்கு என்றும் சிறிதும் வருத்தமில்லை. நீங்கள் தாராளமாக அவ்வாறு செய்யுங்கள். ஆனால் வேளாளர்களை அம்முரண்பட்ட வழிகளில் இழுத்துச் செல்லாதீர்கள். இளைஞர்களையுந் தவறிய வழிகளில் தள்ளாதீர்கள். இளைஞர்களுக்கு விடத்தை யூட்டுவது ஒரு பெருங் கொடுமையே.

**பார்ப்பனரல்லாதார்க் கோரு வார்த்தை :**—யான் கூறுவன வெல்லாம் என் உள்ளத்தி னின்றும் அன்பின் தழல்களால் எழுகின்றன வென்பதை எனது பார்ப்பனரல்லாத நண்பர்களிடை முன்னரே கூறியுள்ளேன். நீங்கள் யாவரும் சுயமரியாதையை மேற்கொள்ள வேண்டுமென்பதே எனது கோரிக்கை. ஆதலின், உங்களை உண்மை நெறியில் செலுத்து முகத்தான், நீங்கள் பெறத் தகாதனவற்றை யெல்லாம், சுயமரியாதைக்கு முரண்பட்டதென யான் கூறுகின்றேன். நெற்றி வியர்வை நிலத்தில் வீழ உழைத்துப் பெற்ற பொருளன்றி வேறொன்றும் யான் விரும்பேன். ஒரு குறித்த வகுப்பில் பிறந்தமைக்காக உங்களுக்களிக்கப் படுவனவற்றை யெல்லாம் நீங்கள் பெறுதல் தகாதெனவே கருதுகின்றேன். சுயமரியாதை ஒரு வகுப்பிற்கு மட்டும் உரியதல்ல. உங்கள் நிலையை நீங்க ளுணர்வீர்களாயின், நெற்றி வியர்வை நிலத்தில் விழவுழைத்து வுலகூட்டும் பெருங் குடிமக்கள் நீங்கள் என்பதை யுணர்வீர்களாயின், உங்கள் நிலையைவிடப் பெருமை வாய்ந்த நிலை வேறொன்றில்லை யென்பதை நீங்களே யுணர்வீர்கள். பார்ப்பனர், தம்மை மேம்பட்டவராகக் கூறிக் கொளின் நீங்களேன் அதைப் பொருட்படுத்த வேண்டும்? பிறர் கைகளை எதிர்நோக்காது தன்கையே தனக்குதவியென உயிர் வாழும் உங்கள் மேன்மை நிலையை நீங்களேன் மறக்க வேண்டும்? நீங்களே செல்வத்தை விளைவிக்கின்றீர்க ளென்பதையும், உலகமே உங்களைத்தான் பொறுத்திருக்கின்றதென்பதையும் நீங்கள் மறந்து மயக்குற வேண்டாம்.

உங்களை ஏனோ இழிவாக நீங்களே கருதிக் கொள்ளுதல் வேண்டும்? இத்தகைய சுயமரியாதையையே உங்களிரத்தத்தில் சேர்க்க முயல்கின்றேன். சுயமரியாதையின் பெயரால் உங்களுக்குப் போதிப்பன ஏனைய வெல்லாம் அவமரியாதையேயாகும். ஒருவரை யொருவர் வீணே வெறுத்தல் அவமரியாதையன்றோ! பார்ப்பனர்கள் எவ்வளவு சிறு தொகையினர்கள். அச்சிறு தொகையினரைக் கண்டு பெருந்தொகையினரான பார்ப்பனரல்லாதார் பயமடைதல் வீரத்தன்மையாகுமா! நீங்கள் யாவரும் வீரர்களாகவும், சிந்தனையிலும் வீரத்தைக் கைவிடாத வாறும் இருக்க வேண்டுமென விரும்புகின்றேன். இதுவே எனது சுயமரியாதையின் கொள்கைகளாகும். மனிதத் தன்மையைக் கைவிடவேண்டாம். கடவுள் உங்களைக் காப்பாராக! கடவுள் உங்களுக்கு அத்தகைய நிலையினை யடைய வுதவிபுரிவாராக. சுபம்.

# தலைமைப் பேருரைமேல் நிகழ்ந்த சில தடைகளுக்கு விடை

[மறைமலையடிகள்]

(உகச-ம் பக்கத் தொடர்ச்சி)

இனி, உறுதிப் பொருள்களுள் இன்பமே முதன்மையான தென்று தொல்காப்பியனார் கூறவில்லை என்று அம்மறுப்புரைக்காரர் துணிந்து சொல்லுதலை உற்றாராயுங்கால் அவர் செந்தமிழ் மொழிக்கு நந்தாமணி விளக்காம் தொல்காப்பியத்தை ஒரு சிறிதாயினும் நல்லாசிரியரை யடுத்து நன்கு ஆராய்ந்து பயின்றவரல்லரென்பது புலனாகா நிற்கும். ஆசிரியர் தொல்காப்பியனாரே பொருளதிகாரத்துப் பொருளியலில் இருபத் தொன்பதாஞ் சூத்திரமாக நிறுத்திய

"எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தானமர்ந்து வரூஉம் மேவற் றாகும்"

என்பது இன்பத்தையே. ஏனைய பொருள் அறங்களினும் முதன்மை பெற்றதாக வைத்துக் கூறா நிற்கவும் அதனை அறியாது கூறிய அவருரையே அவர் தொல்காப்பியம் உணராமையினை நன்கெடுத்துக் காட்டா நிற்கின்றது. அச்சூத்திரத்துக்குப் போந்த "மேவற்றாகு மென்றார், என்பது ஆணும் பெண்ணுமாய்ப் போக நுகர்ந்து வருதலின் ஒருவனும் ஒருத்தியுமே இன்ப நுகர்ந்தா ரெனப்படாது அவ்வின்பம் எல்லா உயிர்க்கும் பொது வென்பதூஉம் அவை இருபாலாய்ப் புணர்ச்சி நிகழு மென்பதூஉங் கூறியதாயிற்று. அறனும் பொருளும் எல்லா உயிர்க்கும் நிகழா, மக்கட்கே சிறந்து வருமென்றா ராயிற்று" என்னும் பழைய உரையாசிரியர் உரைப் பகுதியையேனும் அவர் உணர்ந்திருந்தனராயின், எல்லா உயிர்க்கும் இன்பம் ஒன்றுமே உரித்தாவ தென்பதூஉம், ஏனைப்பொருள் அறங்கள் மக்கள்பால் மட்டும் உண்டாவனவாய் இன்பத்தையே முதலும் முடிவுமாய்க்கொண்டு நிகழு மென்பதூஉம் அதுபற்றியே தொல்காப்பியனார் இன்பத்தை முன்னும் பொருளறங்களை அதன் பின்னுமாக வைத்துக் கூறினாரல்லது ஒரு காரணமும் பற்றாது அங்ஙனங் கூறினாரல்ல ரென்பதூஉம் விளங்க அறிந்திருப்பர். இவையெல்லாம் ஒரு சிறிது முணராது தொல்காப்பியனார் கருத்தை முற்றும் அறிந்தார் போன்று துணிபுரை நிகழ்த்திய அம்மறுப்புரைக்காரர் தந்துணிபு

"கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்"

என்னும் அருமைத் திருக்குறளுக்கு இலக்காய்த் தமிழ்வல்ல சான்றோரால் நகையாடற் பாலதாய் முடிந்தமை காண்க. என்று இத்துணையுங் கூறியவாற்றால் ஆசிரியர் தொல்காப்பியனார் இன்பத்தை முன்னும் ஏனைப் பொருளறங்களை அதன் பின்னும் வைத்துக் கூறிய முறையே அடிப்பட்ட சான்றோர் தம் நூல் வழக்கிற்கும் ஏனையுலக வழக்கிற்கும் பொருந்துவதா மென்பதூஉம், இம்முறையொடு திறம்பிப் புதிது புகுந்த பௌத்த சமண சமயங்களின் பொருந்தா வழக்கே பற்றிப் பிற்காலத்தார் அறத்தை முன்

னும், ஏனைப் பொருளின்பங்களைப் பின்னும் வைத்த தலை தடுமாற்ற முறை அவ்விருவகை மெய்வழக்கொடும் ஒவ்வாதா மென்பதூஉம் இனிது பெறக் கிடந்தமை காண்க.

௯. இனி, "ஆசிரியர் திருவள்ளுவர் அருளிச் செய்தது மக்களுக்குரிய உறுதிப் பொருள்களை முறைப்படக் கூறும் இலக்கிய நூல் ஆதலின், அறம் பொருள் இன்பங்களை முறையாக வைத்தார். இல்லறத்தை முன் வைத்த தனாலேயே இன்பத்தை முன் வைத்தாரென்பது பெறப்படுமாயின், பின்னர் காமத்துப்பால் கூறியது மிகைபடக் கூறல், கூறியது கூறல் என்னுங் குற்றத்தின் பாற்படும். இல்லாளோடு இருந்து செய்யும் அறமே இல்லற இயலில் கூறப்பட்டது. இல்லாளோடு கூடி நுகரும் இன்பம் காமத்துப்பாலில் களவியலில் கூறப்படுகின்றது. ஆகவே, தொல்காப்பியத்துக் களவியலிற் கூறப்பட்ட இன்பம், திருக்குறள் காமத்துப்பால் களவியலிற் கூறப்பட்ட இன்பமேயாகும். இந்த இன்பத்தை அகப்பொருளிலக்கணங் கூறுமுறையில் தொல்காப்பியர் முன் வைத்தார். அறத்தானும் பொருளானும் அடையப்படுவது இன்பமென்னும் முறைபற்றித் திருவள்ளுவர் பின் வைத்தார் எனக் கொள்ளுதலே முறையாகும்" என்று அம் மறுப்புரைக்காரர் கூறிய மற்றைப் பகுதியினை ஆராய்வாம்.

ஆசிரியர் திருவள்ளுவனார் அறம் பொருள் இன்பமென வைத்து நூல் செய்த முறை தமிழ் முறையன்றாய்ப் பௌத்த சமண சமயத்தவர்களாகிய வடநூலார் தாமே புதிது வகுத்த முறையேயாதலை மேலே காட்டினும். இங்ஙனந் திருவள்ளுவர் கொண்ட முறை தமிழ்நூல் வழக்கன்றென்பதற்குத், திருக்குறளுக் குரைகண்ட **பரிமேலழகியார்** 'காமத்துப்பால்' முகத்தில் "இவர் பொருட் பாகுபாட்டினை அறம் பொருளின்பமென வடநூல் வழக்குப்பற்றி ஓதுதலான்" என்று உரை உரைத்தமையே சான்றாம். பண்டுதொட்டுவந்த தமிழ் நூன்முறையெல்லாம் இன்பத்தை முன்னும் பொருளறங்களைப் பின்னும் வைத்தலேயாம் என்பதனை மேலே விரித்துக் காட்டினும். ஈண்டுப் பின்னுஞ் சிறிது அதனையே காட்டுதல் இன்றியமையாதாகின்றது. பழைய **பரிபாடலிற்** செவ்வேள்மேற் பாடப்பட்டிருக்கும் ஒன்பதாம் பாட்டினை இயற்றியருளினவரான ஆசிரியர் **குன்றன் பூதனார்** அப்பாட்டின் கண் வடமொழி நான்மறைவல்ல புலவரை நோக்கித் தமிழது சிறப்பு அறிவுறுத்து நின்றுழித், தமிழுக்கே உரித்தான காதலின்ப ஒழுக்கத்தினையும் அவ்வொழுக்கத்தினையுடைமையால் வள்ளி நாச்சியார் சிறந்தமையும், அவ்வகத்தமிழை ஆராய்ந்தமையால் முருகப் பிரான் சிறந்தமையும் நன்கெடுத்து விரித்து, ஓதுவார்க்குங் கேட்பார்க்குந் தமிழ்ச் சுவை புலனுமாறு விளக்குதல் காண்க. இங்ஙனமே, **பத்துப்பாட்டின்**கண் ஒன்றாகிய **குறிஞ்சிப்பாட்டை** இயற்றிய நல்லிசைப் புலமை மலிந்த சான்றோருந், தங்காலத் திருந்த பேரறிஞர்களாற் "புலனழுக்கற்ற அந்தணாளன்" எனவும், "பொய்யாநாவிற் கபிலன்" எனவும் புகழ்ந்து பாராட்டப் பெற்றவருமான ஆசிரியர் **கபிலர்**, தமிழ்நலம் அறியாத **ஆரிய அரசன் பிரகத்தனுக்குத்** தமிழ் நலம் அறிவித்தற் பொருட்டுத் தாம் பாடிய குறிஞ்சிப் பாட்டின்



கண், இக் காதலின்ப அகப்பொருளொழுக்கத்தினையே விரித்தெடுத்துப் பெரிதுஞ் சுவை ததும்பப் பாடியிருத்தல் காண்க. இன்னும் இதனை விரிப்பிற் பெருகும். இங்ஙனமெல்லாந் தமிழ் நாட்டின்கணிருந்த அடிப்பட்ட சான்றோரெல்லாருந் தமிழுக்குச் சிறந்தது இன்ப வொழுக்கமென்றே ஒருமுகமாய் நின்று கட்டுரைத்துச் சொல்லுதலின், அவர்க்குப் பிற்காலத்தே நூல்செய்த திருவள்ளுவனார் கொண்ட முறை பரிமேலழகியார் காட்டியவாறு தமிழ்முறையன்றென்பது தெற்றென விளங்கா நிற்கும்.

அற்றேல், தமிழ் மக்கள் பொருட்டுத் தமிழ்நூல் இயற்றப் புகுந்த திருவள்ளுவனார், அத்தமிழ் முறையொடு திறம்பி வடநூன் முறையைக் கைப்பற்றிய தென்னையெனிற் கூறுதும். இத்தென்றமிழ் நாட்டுப் பழைய வரலாறுகளை நன்காய்ந்து உணர்வார்க்குத் திருவள்ளுவனார் இருந்த கி. பி. முதல் நூற்றாண்டிற் பௌத்த சமண மதங்கள் வடநாட்டிலிருந்து தமிழ்நாட்டிற் குடிபுகுந்தமை நன்கறியக் கிடக்கும். இதற்குத் திருவள்ளுவர் காலத்தையடுத்துச் செய்யப்பட்ட **சிலப்பதிகாரம், மணிமேகலை** என்னும் பௌத்த சமண் காப்பியங்களே ஒரு பெருஞ் சான்றாம். அவ்வாறு குடிபுகுந்த அச் சமயிகள் இருபாலாரும், உலகியலொழுக்கத்தை ஆழ்ந்தாராய்ந் தறிந்த சான்றோர் தம் நூல்வழக்கை நுணிகியாராயும் அறிவு முதுமையின்றி இன்பத்தினை இழித்துப்பேசி அவ்வாற்றால் ஏனை மக்களினுந் தாமுயர்ந்தார் போற் காட்டி, அங்ஙனங் காட்டுந் தமது காவொழுக்கம் நிலைபெறுதற் பொருட்டு அறத்துக்கே உயர்வு சொல்வாராய், இந்நாட்டவரைப் பெரியதொரு பொய்ம் மயக்கிற் படுப்பாராயினர். இவ்வாறு இன்பத்தை இகழ்ந்து அறத்தை உயர்த்துப்பேசி ஆரவாரஞ் செய்யும் பௌத்த சமண் குருக்களின் உரைகளைக் கேட்ட தமிழ்ப் பொது மக்கள், அவர் இகழ்ந்து பேசிய இன்ப வொழுக்கத்தைத் தாமும் ஏனை மக்களும் விடமாட்டாமை நன்குணர்ந்தும், அறவுரை கூறும் அவர் தம்மினும் உயர்ந்தார்போலுமென மயக்கிக், காவொழுக்கத்தில் நிற்கும் அக்குருக்கண்மாரையும், அவர் தஞ்சொற் செயல்களையும் மிக உயர்த்துப் பேசுவாராயினர். இவ்வாற்றாற் பௌத்த சமண் கோட்பாடுகள் உண்மையில் மக்களியற்கைக்கும், அவர்தம் உலகியல் ஒழுக்கத்திற்கும் ஒரு சிறிதும் பயன் படாவாயிருந்தும், போலியாக எங்கும் பரவி வரலாயின. இது கண்ட தமிழ்ச் சான்றோர்கள் அப்புறச் சமயக் கோட்பாடுகள் மக்கட்குப் பயன் படாமையின் உள்ளீடில்லா வெறும் பதர்களாதல் தெரிந்து, உண்மை உலகியல் ஒழுக்கத்திற்கு ஏற்ற அறத்தின் கூறுபாடுகளைத் தமிழ்த் தொல்லாசிரியர் கொண்ட உண்மைப் பயன்தரு முறையில் இன்பத்தொடு படுத்து விளக்குவான் புகுந்தனர். அங்ஙனம் புகுந்தாருள் தலை நின்றவரான **திருவள்ளுவனார்**, தங்காலத்துத் தம்மோடுடனிருக்கும் மக்கள், பௌத்த சமண் மயக்குரையிற் சிக்கி அறத்திற்கே உயர்வு சொல்லுதல் கண்டு, அவர் வழியே சென்று அவரைத் திருத்த வாராய், அறத்தை முன்வைத்து நூல் செய்வாராயினர். அங்ஙனம் நூல் செய்கின்றுழிப், பெரும்பாலும் இம்மையையே

நோக்கின இல்லறமும், பெரும்பாலும் மறுமையையே நோக்கின துறவறமும் என அறத்தை இரண்டாக வகுத்து; அவ்விருவகையறமும்பொருளை இன்றியமையாத கருவியாக அவாவுதல் பற்றிப், பொருளை அதன் பின்வைத்து அவ்வாறு பொருள் துணையாக அவ்விருவகை அறத்தானும் அடையப்படும் இன்பமும், இம்மைக்கண் நுகரப்பட்டு இல்லறத்துக் கேதுவாய் நிற்குங் காதலின்பமுந், துறவறத்தின் பயனாய்மறுமைக்கண் நுகரப்படுந்திருவருள் இன்பமு மென இரண்டாதல் தெரித்து, இன்பத்தினை இறுதிக்கண்ணும் வைத்து நூல் யாப்பாராயினர். ஆகவே, இறுதிக்கண் அவர் நிறுத்திய இன்பத்துப்பால் காம வின்பத்தினையே நுதலுவதென்று அம்மறுப்புரைக்காரர் கூறியது பொருத்தமில் கூற்றாதல் காண்க. இறுதிக்கண் நின்ற இன்பத்துப்பால் இல்லறத்தின் பாலதான காதலின்ப மொன்றனை மட்டுமே யுணர்த்துவ தன்று. சூழ்ந்து நோக்குவார்க்கு அது துறவறத்தின் பாலதான திருவரு ளின்பத்தையும் ஒருங்கு உணர்த்துவதேயாகும். இங்ஙனமே தமிழ் நூல்களிற் கூறப்படும் அகப்பொருட் காதலொழுக்க மெல்லாம் இம்மையின்ப மொன்றனையே உணர்த்தாமல்; திருவருளின்பத்தையும் உடனெடுத்து ஓதுவதென்பதற்குச் சைவசமய ஆசிரியரில் முதல்வரான **மாணிக்க வாசகப் பெருமான் திருச்சிற்றம்பலக் கோவையார்** அருளிச் செய்தமையும், ஏனை **அப்பர் சம்பந்தர், சுந்தரர்**, முதலான நம் சமய குரவர்களுந் தாமருளிச் செய்த திருப்பதிகங்களில் ஆங்காங்கே தலைவன் தலைவி முறையில் வைத்து இறைவனைப்பாடி யிருத்தலும், சைவ சித்தாந்த நூல்களில் ஒன்றான **திருவுந்தியார்**,

> "பெற்ற சிற்றின்பமே பேரின்பமாயங்கே
> முற்ற வரும் பரிசு உந்தீபற
> முளை யாது மாயை என்று உந்தீபற"

என்று உரைத்தலுமே சான்றாம். அகப் பொருட்காதல் ஒழுக்கந்தினைக் கூறுந் திருச்சிற்றம்பலக் கோவையார் இவ்வாழ்ந்த திருவருளின்பக் கருத்தும் உணர்த்தும் பெற்றியது என்பதற்குச் சிவ ஞானி ஒருவர் இயற்றின **திருக்கோவையார் உண்மை** என்னும் நூலுஞ் சான்று பகரும். எனவே, திருவள்ளுவனார் தமதருமைத் திருக்குறள் நூலின் இறுதிக்கண் நிறுத்திய இன்பத்துப்பால், அவர் தாம் வகுத்த இல்லறந் துறவறம் இரண்டிற்கும் பொதுவான இன்பத்தையே உணர்த்துங் கருத்துடையதன்றி, இல்லற நுகர்ச்சியொன்றற்கே உரிய காதலின்பத்தினை மட்டும் உணர்த்துவதன் றென்பது கடைப்பிடிக்க. இவ்வாற்றால், இல்லாளொடு கூடியிருந்து நுகரும் இன்பமே காமத்துப் பாலிற் சொல்லப் பட்டதென்னும் அம்மறுப்புரைகாரர் கூற்று உள்ளீடில்லாப் போலியாய் ஒழிந்தமை கண்டு கொள்க.

இனிப், பௌத்த சமண சமயக் குருக்கண்மார் இல்லறத்தை இகழ்ந்து துறவறத்தையே பெரிது கொண்டாடா நிற்பர். இல்லறத்தின் வழிச் செல்லாத துறவுநிலை பேரின்றிச் சீர்குலையும் என்பதற்கு அத்துறவிமார் தங் காமக் கரவொழுக்கமே சான்றாம். இவ்வுண்மைகண்டு தெய்வத் திருவள்ளுவர் அவர்தங் கொள்கையை மறுத்தற் பொருட்டே இன்பத்தின் வழித்தாகிய இல்லறத்தை முன் வைத்து நூல் செய்ததூஉம்,



> "அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றில் புறத்
> போஒய்ப் பெறுவ தெவன்" [தாற்றிற்

என்றும்,

> "இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்
> முயல்வாரு ளெல்லாந் தலை" [பான்

என்றும்,

> "ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்
> கோற்பாரி னோன்மை யுடைத்து" [கை

என்றும்,

> "அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃ
> பிறன்பழிப்ப தில்லாயி னன்று" [தும்

என்றும்,

> "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானு
> தெய்வத்துள் வைக்கப் படும்" [றையுந்

என்றும் அவர் இல்லறத்தைத் தமிழ்ச் சான்றோர் வழக்குப்பற்றித் துறவறத்தினும் மிக்கெடுத்துக் கூறியதூஉ மென்க.

இனி, இன்பத்தின் வழித்தாகிய இல்லறத்தைத் தெய்வத் திருவள்ளுவனார் முன்வைத்து நூல் யாத்தமையின் அவர் இன்பத்துக்கே முதன்மை கொடுத்தார் என்று எமது தலைமைப் பேருரையிற் கூறினமன்றி, இல்லாளொடு கூடி நுகரும் இன்பமும் அவர் இல்லற இயலிற் கூறினரென மொழிந்திலேம். இவ்வாறாகவும், இன்ப நுகர்ச்சிக்கு அவர் முதன்மை தந்தார் என யாம் மொழிந்தேம் எனப் பிழைபடக் கொண்டு, அம்மறுப்புரைக்காரர் தமக்குத் தோன்றிய வாறெல்லாம் எழுதினர். இன்பமும் இன்ப நுகர்ச்சியும் வேறு வேறாதலை உணர்ந்திருந்தனராயின் அங்ஙனம் பிழைபட உரையார். மனையாளைப் புணர்ந்து நுகரும் இன்பங் காமத்தின் பாற்படும். அவளைப் புணராத காலங்களில் அவடன் அருங் குணங்களொடு பழகுதலானும், அவடன் அறிவுச்செயல்களைக் காண்டலானும், அவடன் அறிவு மொழிகளைக் கேட்டலானும், எல்லா வகையினும் அவள் தன்னோடு ஒத்து ஒழுகுதலை வியத்தலானும், அவடன் எழில் நலங்களை நோக்குதலானுங் கணவற்கு ஓவாது விளையுமின்பங் காதலின்பத்தின் பாற்படும். இங்ஙனமே தன் கொழுநன்றன் அருமைப்பாடுகளை உணருந்தொறும் நினையுந்தொறும் மனைவிக்குங் கழிபெருங் காதலின்பம் ஓவாது விளையா நிற்கும். இவ்வாறு காதலின்ப நிகழ்ச்சி அவர் தமக்குள் உண்டாயினாலன்றி அவர் தம்முள் அன்புடையராய் ஒழுகுதல் இயலாது; அவர் அன்புடையராய் ஒழுகினாலன்றி ஒருமித்து நின்று,

> "அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
> துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்
> விருந்து எதிர் கோடலும்" [பின்

ஆகிய இல்லறத்தை இனிது நடாத்துதலும் ஒரு சிறிதும் இயலாது. ஆகவே, இன்பத்தின் வழித்தாகவே அல்லது இன்பத்தை நுதலியே இல்லறம் நடைபெறுதல் ஐயுறவின்றித் தெளியப்படும். இவ்வியல்பினை, ஆசிரியர் திருவள்ளுவ நாயனாரே காதலின்பத்தின் விளைவான அன்பை முன் வைத்து அறத்தைப் பின்வைத்து,

> "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்
> பண்பும் பயனும் அது" [கைப்

என்று கூறி நன்கு விளக்கி யருளினார். அவர் கருத்தறிந்த உரைகாரர் பரிமேலழகியாரும் "இல்லாட்குங் கணவற்கும் நெஞ்சொன்றாகா வழி இல்லறங் கடை போகாமையின், அன்புடைமை பண்பாயிற்று, அறனுடைமை பய

ஞயிற்று." என்று உரை கூறியதூஉம் உற்று நோக்கற்பாலதாம். இவ்வியல்பெல்லாம் நூல் வழக்கானேயன்றி, உலகியல் வழக்கானும் எளிதில் உணரக் கிடப்பவும், இவைதாமும் உணர மாட்டாது, அறமே முதற்கண் வைக்கப்பட்டதென அம்மறுப்புரைக்காரர் கூறியது இருவகை வழக்கிற்கும் மாறுகோளாம் என்க. எனவே, காதலின்பத்தினை அடிப்படையாய்க் கொண்டெழுந்த இல்லறத்தைத் தெய்வத் திருவள்ளுவர் முன் வைத்து நூல் யாத்தது, அவர் பண்டைச் செந்தமிழ் நல்லாசிரியர் நிறுத்திய மெய்வழக்கிற்கு மாறாகாமைப் பொருட்டேயா மென்பதூஉம், தங்காலத்துப் புதிது புகுந்த பௌத்த சமண் சமய வழக்குப்பற்றி அறத்தை முதல் நிறுத்தினும் அவ்வறத்திற்கு அடிப்படையான இன்பத்துக்கு முதன்மை கொடுத்தலே அவர் தம் உண்மைக் கருத்தா மென்பதூஉம், இப்பெற்றி யெல்லாம் நன்காய்ந்து பாராது அம்மறுப்புரைக்காரர் கூறிய கூற்று திருவள்ளுவனார் கருத்தொடு முரணிப் பிழைபடுவதா மென்பதூஉந் தேற்றமாதல் காண்க.

ச. இனி, இன்பத்தை நுதலியன்றி அறஞ் செய்வாரையும் பொருள் செய்வாரையும் யாண்டுங் கண்டிலமாதலின் என்று யாங்கூறிய பகுதியை மறுப்பான் புகுந்த அம்மறுப்புரைக்காரர்,

"அனைவராலும் விரும்பப்படுவது இன்பமே. இன்பம் வேண்டியே அனைவரும் பொருளை யீட்டுகின்றனர்; இன்பம் வேண்டியே அறத்தைச் செய்கின்றனர். ஆயினும் தாமெண்ணியவாறு பொருள் கைகூடாமையும் அறம் முற்றுப் பெறாமையும் பலரிடத்துங் காணப்படுகின்றன.

இவற்றிற்குக் காரணம் என்ன என்று சொல்வது? முன் செய்யப்பட்ட வினையென்று தானே சொல்ல வேண்டும்." என்று நெகிழ்ந்து எடுத்த பொருளுக்கு இயைபில்லாதவற்றைப் பேசுதலோடு, யாங் கூறியதனை உடன்பட்டும் எழுதுகின்றார்.

இன்பத்தை நுதலியே பொருள் ஈட்டுதலும் அறஞ் செய்தலும் நிகழ்கின்றன என்னும் எமது கோட்பாட்டுக்கு முதலில் இணங்கிப் பேசியவர், அம்மட்டில் அமையாது, இன்பத்தை நுதலி மக்கள் செய்யும் அவ்விருவகை முயற்சியும் முட்டுப்படுதற்குக் காரணம் பழவினையே என்கின்றார். எல்லா உயிர்களும், அவ்வுயிர்களிற் சிறந்த மக்களுஞ் செய்யும் முயற்சி யெல்லாம் இன்பத்தை நுதலியே நடைபெறுதல் மறுப்புரைக்காரரை யுள்ளிட்ட எல்லார்க்கும் ஒப்ப முடிந்ததாதலின், அவ்வுண்மையினையே யாம் எடுத்து விளக்கினமன்றி, மக்கள் செய்யும் முயற்சி பழவினையால் முட்டுப்பட்டு வறிதாதலையேனும், அன்றி நிறைவேறுதலையேனும் எடுத்துப் பேசினேமல்லேம். அங்ஙனமாகவும், இவர் எடுத்த பொருளைவிட்டு அதற்கியைபில்லாத தொன்றனை எடுத்துரைத்தல் 'மேற்கோள்மலை வென்னுந் தோல்வி முறை (நிக்கிரக ஸ்தானம்) ஆதலை உணர்ந்திலர் போலும்! இன்பத்துக்கு முதன்மை சொல்லும் எமது மேற்கோளை (பிரதிக்ஞை) மறுக்கப் புகுந்தவர் அதனை மறுத்து அறத்துக்கு முதன்மை சொல்லுந் தமது மேற்கோளை நாட்டல் வேண்டுமே யல்லாமல், அதனை விடுத்துப் பழவினைக்கு



இடையே முதன்மை சொல்லப் புகுதல், மறுப்பெழுதும் முறை இன்னதென்றே அறியாதார் தங்குழறுபடையாம். அறம் முதலியவற்றிற்குக் காரணம் பழவினையே யாயிற், பின்னர் அறத்தைப் பொருளின்பங்களுக்குக் காரணமென்றல் முன்னொடு பின் முரணுமன்றோ?. மேலும், பழவினைக்கே முதன்மை சொல்வார் மீமாஞ்சகரே யன்றிச் சைவ சித்தாந்திகளல்லர். மக்கள் தமது நன்முயற்சியால் ஊழையும் புறங் காண்பர் என்பதே சைவ சித்தாந்திகள் கோட்பாடு. என்னை? மக்கள் தமக்கென ஓர் அறிவுஞ் செயலும் இலராயின், அவர் செய்யும் முயற்சி யெல்லாம் ஊழ்வினை யொன்றினாலேயே யாவனவாயின் அவர் அறிவுஞ் செயலு மில்லாக் கல்லும் மண்ணும் போல், அறிவில் (அசேதனப்) பொருள்களா வாராதலின் என்க. அதுவேயுமன்றி, ஆசிரியர் திருவள்ளுவ நாயனார் அறத்துப்பாவின் ஈற்றில் ஊழ்வலியை மிகுத்துக் கூறினாராயினும், அவ்வூழின் வலி, மக்களின் விழுமிய அறிவு முயற்சி முன்னே நில்லா தொழியு மென்று தெருட்டிப் பின்னின்ற பொருட்பாவில்,

"ஊழையும் உப்பக்கங்காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்"

என்று முடித்துக் கூறுதலாற், பழவினைக்கு முதன்மை கூறுதல் நாயனார்க்கும் உடன் பாடல்லாமை நன்கு பெறுதுமன்றோ! மலத்தினால் மறைவுண்டு கிடந்த உயிர்கள் இறைவன் திருவருளால் மாயையிற் றிரட்டப்பட்ட உடம்பினைக் கருவியாகப் பெற்று அம்மலமாசு சிறிது நீங்கி அறிவும் முயற்சியும் உடையனவாய் முனைந்து நிற்கும் வழி அவை இன்பத்தை அவாவியே நிற்கும் அல்லது அறத்தினை அவாவி நில்லா என்பதூஉம், முதன் முதற் பிறவிக்கு வரும் ஓரறிவுயிர்கட்குப் பழவினை சிறிதுமின்மையின் அவற்றின் முயற்சிக்குப் பழவினை காரணமாகாது இன்பமே தலைக்காரணமாய் நிற்கு மென்பதூஉம், அதனாற் பழவினைக்கு முதன்மை கூறுதல் சைவ சித்தாந்தத்துக்குச் சிறிதும் அடாதென்பதூஉம், யாண்டும் உயிர்கள் கீழ்க்கீழ்ப் பிறவிகளிற் செய்த முயற்சிகளின் பழக்கந்துணையாக மேன்மேற் பிறவிகளில் மேலுமேலும் அறிவு முயற்சியுடையவாய்ச் செல்லுதலின் இன்பத்தாலுந்தப்பட்ட அறிவு முயற்சியே பிறவியினேற்றத்திற்குக் காரணமா மென்பதூஉம், இதுவே சைவ சித்தாந்தத்துக்கும் அதனை அகத்தடக்கி நூல் செய்த திருவள்ளுவனார்க்குங் கருத்தா மல்லது இதற்கு மாறாக அறத்திற்கு முதன்மை சொல்லுதலும் அதனை விட்டுப் பழவினைக்கு முதன்மை சொல்லுதலும் அவர்க்குச் சிறிதுங்கருத்தன்றா மென்பதூஉம், அம்மறுப்புரைக்காரர் உணரக் கடவாராக. "சிறப்பீனுஞ் செல்வமுமீனும்" என்னுந் திருக்குறள் அறஞ் செய்தலால் வரும் பயன் உணர்த்துவதே யன்றி இன்பத்தினும் அறமே சிறந்ததென அறத்திற்கு முதன்மை சொல்லாமையின் அதனை எடுத்துக்காட்டுதலால் அம்மறுப்புரைக்காரர் கருத்து நிரம்புமாறில்லை யென்று ஓர்க.

# யோகம்

[கா. சி. சிவசங்கர முதலியார்]

சைவர்கட்குரிய நான்கு நிலைகளில் மூன்றாவதாகிய யோக நிலையைப் பற்றி ஆராய்வது இக்காலத்தில் மிக அருமையாயிருக்கின்றது. யோகத்தைப் பற்றித் திருமூலர் திருமந்திரம், ஔவைக்குறள், பதினெண் சித்தர்கள் நூல்கள் முதலியவைகளை முறையாய்ப் பயின்றால்தான் அதன் பயனை மக்கள் அடைய முடியும். பதினெண் சித்தர்களின் நூல்களும் ஔவைக் குறளும் பன்னிரு திருமுறைகளில் அடங்காமையால் சைவர்கள் அவைகளைப் போற்றிப் படிப்பதில்லை. பல சைவர்கள் சித்தர்கள் சென்ற முறை வேறு. அது நமக்கு வேண்டாம் என்று விலக்குகின்றார்கள். இந்த சித்தர்கள் முறையும் ஔவையார் முறையும் திருமூலர் திருமந்திரத்திலே நன்கு விளக்கியிருப்பது நமது புண்ணியமே. பன்னிரு திருமுறைகளில் ஒன்றாகிய திருமந்திரத்தை விலக்குவோர் சைவராகார். ஆதலால் அதில் கூறிய முறைகளைத் தக்கார்பால் அறிந்து அநுபவித்துப் பயன் கண்டால்தான் சைவத்தின் பேரின்பத்தைச் சைவர்கள் நுகர முடியும். மலவுடம்பையும் அலைகின்ற நெஞ்சத்தையும் உடையோர் இவ்வின்பத்தைப் பெறவியலாது. ஆகையால் இவ்வின்பம் பெற விரும்புவோர் முதலில் மூச்சுப் பழக்கம் செய்து உடம்பைத் தூய்மையாக்கிக் கொண்டும் மனதை நிலைபெறச் செய்து கொண்டும் அவைகளை முற்றும் வயப்படுத்திக் கொள்ள வேண்டும். அப்பேறு பெற்றாரை உலகம் வணங்கும்.

“ தன்னுயிர் தானறப் பெற்றானை யேனைய
மன்னுயி ரெல்லாந் தொழும் ”—குறள்.

“ வெளியான நீயென்
மனவெளியூடு விரவினையால் ”

என்று தாயுமானார் கூறியபடி உடம்பிலுள்ள போதே இறைவனோடு கலத்தல் இந்த யோக நிலையில் தான் கூடும். அங்ஙனம் இறைவன் திருவடி நீழலடைந்தோர் நெடுங்காலம் நிலவுலகத்தில் இன்ப வாழ்வடைவார்கள்.

“ மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார் ”—குறள்

“ கால்பிடித்து மூலக்
கனலைமதி மண்டலத்தின்
மேலெழுப்பின் றேகம் விழுமோ
பராபரமே ”—தாயுமானார்

## யோகத்தைப்பற்றிய தவறான எண்ணங்கள்

மூச்சைப் பிடிக்கப் பழகினால் தலை வெடிக்குமென்றும் மூளை கலங்குமென்றும், வயிறு கிழியுமென்றும், அண்டம் பிளக்குமென்றும், கண் குருடாம் என்றும் காது செவிடாம் என்றும் முறையிற் பழகாத சிலர் மொழிவதை மெய்யென்று நம்பிப் பெரும்பாலோர் அதை நினைக்கவும் அஞ்சுகின்றார்கள். இயம நியமாதிகளால் தீய பழக்கங்களை நீக்கி நல்ல பழக்கங்களை மேற்கொள்ளாதவர்களுக்கு இப்பயிற்சி தீங்கு செய்தல் கூடும். ஆகையால் இந்நிலையை மேற்கொள்ள விரும்புவோர், மூக்குப்பொடி, பீடி, சிகரெட்டு, சுருட்டு, கள், சாராயம், கஞ்சா, அபினி, மீன், முட்டை, புலால், காபி, டீ முதலியவைகளை நீக்கி பரத்தையர் மயக்கம் நீக்கி, தூயபழக்கமும், தூய நினைப்பும் உடையாராய் இருக்க வேண்டும். யோகத்தைப் பயில்வோர் மனைவி நலனுந் துய்க்கக் கூடாதென்று சிலர் கூறுவதை மெய்யெனநம்பிச் சிலர் அதைப்பற்றி விசாரிக்கவும் முன்வாரத் தயங்குகிறார்கள்.

## சிவயோகம்

மூச்சைப் பிடிக்க முயலும் யோகியரே சிவத்தோடு கலக்கின்றார்கள் என்பதைத் திருமூலர்,

“ உந்திச் சுழியி னுடனேர் பிராணனைச்
சிந்தித் தெழுப்பிச் சிவமந் திரத்தினால்
முந்தி முகட்டி னிறுத்திய பானனைச்
சிந்தித் தெழுப்பச் சிவனவ னாமே ”

என்கிற திருமந்திரத்தில் விளக்கியருள்கின்றார்.

## தத்துவ சோதனை

காற்றைப் பிடிக்கும் யோகத்தினால் தான் தசவாயுக்கள், தசநாடிகள், ஐம்புலன்கள், அந்தக் கரணங்கள், நவவாசல்கள், கைலாசவாசல், மூலக்கனல் முதலிய தத்துவங்களைத் தனித்தனியே ஆண்டு வசப்படுத்த இயலும். இந்நிலையடைந்த பெரியார் விதியையும் வெல்லுவார் என்பதைத் திருமூலர்,

“ வென்றிட லாகும் விதிவழி தன்னையும்
வென்றிட லாகும் வினைப்பெரும் பாசத்தை
வென்றிட லாகும் விழைபுலன் றன்னையும்
வென்றிடு மங்கைதன் மெய்யுணர் வோ
ருக்கே ”

என்கிற திருமந்திரத்தில் விளக்கியருளுகிறார்.

ந. ந.

## விந்து சயம்

மக்களுக்கு இளமை கழிய கழிய இரத்தம் கீழிறங்கி போகத்திலாசையை யுண்டாக்கி விந்துவைவெளியாக்கி நோய் மூப்பு மரணங்களை யுண்டாக்குகின்றது.

விந்து வெளியாகாது மணியாய் விளங்கி, சிவத்தைப் பிரியாத சத்தி போலும் மனைவி தன்னைப் பிரியாது தொண்டு செய்ய தான் இளமையும் அழகும் மாறாத இன்ப வடிவினனாய் விளங்குவதே இந்த யோகம் சித்தியானதற்கு அடையாளம். பத்தியங் காத்து மூச்சுப் பழக்கம் கை வந்து விந்து ஜயம் பெற்ற யோகிக்கு மாதர் போகம் எவ்விதத் தீங்கையும் செய்யாது. இவ்வரும் பொருள் அடியிற் காணும் திருமூலர் திருமந்திரங்களால் நன்கு விளங்குகின்றது.

“ சாற்றிய விந்து சயமாகுஞ் சத்தியால்
ஏற்றிய மூலத் தழலை யெழமூட்டி
யாற்றிசை யோடா நடுநாடி நாதத்தோ
டாற்றி யமுதம் அருந்தவிந் தாமே ”

“ யோகமும் போகமும் யோகியர்க்காகுமால்
யோகஞ் சிவரூப முற்றிடு முள்ளத்தோர்
போகம் புவியிற் புருடார்த்த சித்திய
தாகு மிரண்டு மழியாத யோகிக்கே.”

“ மாத ரிடத்தே செலுத்தினு மவ்விந்து
காதலி னால்விடார் யோகங் கலந்தவர்
மாத ருயிராசை கைக்கொண்டே வாடுவர்
காதலர்போன் றங்கன் காதலாஞ்சாற்றிலே.”

## மெய்க் கோவிலிற் சிவம்

இமய நியமாதிகளால் நல்லொழுக்கமடைந்து ஆசனத்தால் புறவுடம்பை வசமாக்கி, பிராணாயாமத்தால், நாடிகளைத் தூய்மையாக்கி, பிரத்தியாகாரத்தால், ஐம்புலன்களை அடக்கி யாண்டு தாரணையால் உள்ளுடம்பை யுணர்ந்து, தியானத்தால் சிவமாகிய பெரியார்

18136

எல்லாம் தானாகவே விளங்குகின்றார் என்பதைத் திருமூலர் அடியிற்காணும் திருமந்திரத்தில் விளக்கி யருளுகின்றார்.

"அண்டங்க ளேழு மகண்டமு மாவியுங்
கொண்ட சராசர முற்றுங் குணங்களும்
பண்டை மறையும் படைப்பளிப் பாதியுங்
கண்ட சிவனுமென் கண்ணன் றியில்லையே"

## யோகிக்கு எமனில்லை

அஜபா மந்திரத்தால் கைலாச வாசலைத் திறந்து வெளியோடும் மூச்சைத் திருப்பி அச்சிதம்பரத்தில் செலுத்தி அசைவற்றிருக்கும் இன்ப வடிவான யோகி தான் விரும்புகிற காலவரை இவ்வுடம்பிலேயே இருக்கலாம். அப்படி இருக்கின்றோரை நாம் பார்க்கவில்லையே என்று நமது நாட்டில் சிலர் கேட்கின்றார்கள். அவர்களை நாம் தேட வேண்டுமா அல்லது அவர்கள் நம்மைத் தேடி வரவேண்டுமா? அவர்களுக்கு நம்மால் யாது பயன்? காடும், மலையும், குகையும் தேடினாலல்லவா அத்தகையாரைக் காணலாம்.

" கூற்றங் குதித்தலுங் கைகூடு நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு"
—திருவள்ளுவர்.

" ஏற்றி யிறக்கி யிருகாலும் பூரித்து
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை யுதைக்குங் குறியது வாமே"

"புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட வுள்ளே நின்மல மாக்கில்
உருப்புச் சிவக்கு மூரோமங் கருக்கும்
புறப்பட்டுப் போகான் புரிசடையோனே"

## பிராணயாமம்

சிறு பிள்ளைகள் பயனறியாமலே படிப்பதுபோல சிலர் பூரக கும்பக ரேசகம் செய்து வருகின்றார்கள். அதாவது மூக்கினால் காற்றை உள்ளுக் கிழுத்து, சிறிது நேரம் அடக்கி வைத்து பிறகு வெளியே விடுகின்றார்கள். அதனால் பயனில்லை. சிலர் உள்ளே இழுக்கும் காற்றைக் காட்டிலும் அதிகமாய் வெளியே விட்டு விட்டு நரம்புத் தளர்ச்சியையும் பல ஹீனத்தையும் அடைகின்றார்கள். இக்காலத்து மக்கள் குருவில்லாமல் பழக வேண்டுமானால் முதலில் ரேசகம் கும்பகம் செய்யாமலே அதாவது விடுவதும் அடைத்து வைப்பதும் இல்லாமலே மூக்கினால் பூரிக்க மட்டும் பழக வேண்டும். காற்றை மூக்கால் நீள கூடியவரை உள்ளுக்கிழுக்கவே பழகி வரவேண்டும். இழுத்த காற்று வெளியேறுவதற்கு நமது முயற்சி வேண்டாம். உள்ளே இழுக்கின்ற காற்று மயிர்க்கால்கள் வழியாய் வெளியாக வேண்டும். எழுபத்தீராயிரம் நாடிகளிலும் காற்றை நிரப்புவதே இப்பயிற்சியின் நோக்கம். இதைப்பற்றி அறிய விரும்புவோருக்குத் தெரிந்ததைக் கூறத் தயாராயிருக்கிறேன்.

முருகன்
திருவருட்பா

வடலூர் - இராமலிங்க சுவாமிகள் அருளிச் செய்தது; திருவருட்பாவில் ஐந்தாம் திருமுறையாகத் திகழ்வது. இராமலிங்க சுவாமிகள் திருவருட்பேறு குறித்துத் திருத்தணிகையில் முருகப் பெருமான் முன்னிலையில் "அமுத அமுதை" இந்நூலில் தேங்கி வழிகிறது. "முருகன் திருவருட்பா" கருங்கல் மனதையுங் கரைத்துக் கரைத்து இளகச் செய்யும்; திருவருட்பேற்றில் காதல் எழுப்பும். அதை ஒருகால் ஓதுவோரும் அன்பராதல் ஒருதலை.

விலை அணா 8.

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

# விறகிற் றீயினன்

[வே. நாராயணன்]

கடவுளின் தன்மையை விளக்குவனவாகத் தேவாரப் பாடல்கள் பல அமைந்துள்ளன. அவற்றுளே,

"விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோனட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே"

என்னும் பாடல் அப்பர் தேவாரம்.

இங்கு, விறகிலே தீப் போன்றவன் என்றதன் கருத்தை நன்கறிதல் வேண்டும். 'விறகு' என்பதால் எரித்தற்கே உதவும் பசையற்றுக் காய்ந்த மாங்களைக் குறிக்கின்றார். அவை தம்மிலே யாதும் பயனுளவாகா; தீயினுக்கே உதவுகின்றன. அதுபோலவே சராசரங்கள் முழுவதும்; ஈசனுக்கு அவை உரித்தாகின்றன; அவன் பொருட்டே யுள்ளன; அவனிடத்திலே கலந்து தம் உருவங்கள் அற்றுப் போகின்றன. பிறகு தீயினுக்கே உரியது போலவே சகல ஆன்மகோடிகளும் ஈசனுக்கே உரியோர் ஆகின்றனர். தீயை நோக்கி மரக்கட்டைகள் பலவற்றையும் விறகு என்பதுபோலப் பரஞ்சோதியினைக் கருதுங்கால் உயிர்கள் பலவும் அவனிடம் சோதி பெறும் கலங்கள் ஆகின்றன. மேலும், விறகு விறகாவது அதனுள் தீயின் தன்மை இருப்பதனாலே யன்றோ? அதுபோலவே, உயிர்கள் எல்லாவற்றிலும் ஈசன் உள்ளுறைதலாலே உயிர்கள் உயிர்களாகின்றன. இதையே உயிர்களின் சத்தைப்பரமேசுவரனால் உண்டாவது என்று கூறுவர். விறகின் ஒவ்வொரு அணுவிலும் தீ பரந்து இருந்தாலும் அது விறகிலே இருப்பது நமக்குத் தெரிவதில்லை. அதுபோலவே ஈசனும் தன்னுடைய வியாபக சக்தியாலும் அந்தர்யாமித்துவத்தாலும் ஒவ்வொரு உயிரிலும் அமர்ந்து கரந்து எங்கும் பரந்துளன்.

இவ்வுரையிலே வேறொரு உட்பொருளும் பொதிந் துள்ளது. விறகு தீயுடன் சேரவே நீறாக மாறுகின்றது. அந்நீறு தீயின் சேர்க்கையால் ஒளி வீசுவது எனினும் அதற்குத் தன்னொளி என்பது இல்லை; விறகு எரியும்போதும் தீயின் ஒளியே ஒளிர்கின்றது. இதுபோலவே ஆத்ம ஞானிகள் பரஞ்சோதியின் தேஜஸால் கவரப்பட்டு ஒளி வீசித் திகழ்கின்றனர். அவ்வாறு வீசும் ஞானவொளி ஈசனுடைய ஒளியே யன்றி, உயிர்களுக்குத் தன்னொளிகிடையாது. ஞானத்தீயால் எரிக்கப்பட்ட உயிர்கள் நீறாகி அக்கினி வடிவமான ஈசனிடத்தே பொடிபோல் அமர்கின்றனர்; அமர்ந்து அத்தீயின் ஒளியைத் தாமும் பெறுகின்றனர். இதுவே மோக்ஷத்தின் உண்மை; இரண்டறக் கலந்து வேறு வடிவிலாமல் போவது அன்று மோக்ஷ பதவி; ஈசனுடைய அடிப் பொடியாக அமர்ந்து அவனுடைய ஒளிதாங்கி அழிவிலா திருத்தலே மோக்ஷமாகும் என்பது 'விறகிற்றீயினன்' என்பதால் அறியக்கிடக்கின்றது.

இவ்வாறு ஈசனுடைய தன்மையையும் உயிர்களின் தன்மையையும் மோக்ஷத்தின் தன்மையையும் விளக்கி அப்பர் சுவாமிகள் வேறு இரண்டு உதாரணங்களாலே ஈசனுடைய தன்மை

யை மறுபடியும் எடுத்துக்கூறி மோக்ஷத்திற்கு உபாயத்தையும் கூறுகின்றார்.

“பாலிற்படு நெய்போல் மறையநின்றுளன்”, வெண்ணெய் பாலிலே மறைந்து கிடக்கின்றது; பாலிலே கோலை நட்டு கயிறு கொண்டு வாங்கிக் கடைந்தால் அவ்வெண்ணெய் வெளிப்படும்! அது போலவே, பால் போன்ற தூய மனத்திலே வெண்ணெய் போல மறைந்து உறைகின்றான் ஈசன்; அவனுக்கும் நமக்கு முள்ள பொருத்தத்தை உணர்ந்து அவனைச் சார்தல் வேண்டும்; அவ்வாறுசார்வதே பக்தி எனப்படும். அதனை ‘உறவு’ என்று குறிப்பர் அப்பர் சுவாமிகள். பக்தியின் பரீவாஹமே உணர்வு எனப்படும். ஒரு தைல தாரைபோல தொடர்ந்து பெருகுமாயின் இது பக்தியோகம் எனப்படும். அதைக் கயிற்றோடு உவமித்தனர்; “உறவு கோனட்டு உணர்வு கயிற்றினால் முறுக வாங்கிக் கடைய” மாமணிச் சோதியான் நம்முன் தோன்றுவான். இவ்வுவமையினை நம்மாழ்வாரும் ஒரு பாசுரத்திலே கூறியுள்ளார், “சிறந்த கால் தீநீர்வான் மண்பிறவு மாய பெருமானே! கறந்தபாலுள் நெய்யேபோல் இவற்றுள் எங்கும் கண்டுகொள், இறந்து நின்ற பெருமாயா! உன்னை எங்கே காண்கேனே!”

‘மாமணிச் சோதியான்’ என்பதால் அப்பர் சுவாமிகள் ஈசன் சுவயஞ்சோதிஎன்பதை விளக்குகின்றார். உயிர்களிடம் அமர்ந்த சோதி அவ்வுயிர்களினுடையது அன்று; விறகின் ஒளி விறகினதன்று என்பது போல, ஈசனுடைய சோதி தன்னொளி; உயிர்களின் மலினத்தைப் போக்கவே, ஈசனுடைய ஒளி ஸ்படிகம் போன்று அமலமான உயிர்களினூடே பிரகாசிக்கின்றது. என்று ஈசன் தன்மையையும் உயிரின் தன்மையையும் விளங்க வைக்கின்றார் அப்பர் சுவாமிகள்.

இம்மூன்று எடுத்துக் காட்டுகள் மூவகைப்பட்ட மோக்ஷமார்க்கங்களையும் குறிப்பன. ‘மாமணிச் சோதியான்’ என்பதினால் அமலங்களைப் போக்கும் கருமமார்க்கம் சுட்டப்பட்டது. ‘விறகிற்றீயினன்’ என்பதால் ஞானமார்க்கமும் ‘பாலிற்படு நெய்போல் மறைய நின்றுளன்’ என்பதால் பக்தி மார்க்கமும் சுட்டப்பட்டன. இவற்றுள், தாம் கைக்கொண்டது பக்திமார்க்கமே யாதலினால் அவ்விதியை விஸ்தரித்துப்பின் இரண்டு அடிகளாலேகூறிப் பாடலையும் பதிகத்தையுமே முடிக்கின்றார். இவர் கூறிய உவமைகளே பக்திமார்க்கத்திற்கும் ஏனையமார்க்கங் களுக்கும் உள்ள தாரதம்மியங்களை விளக்குகின்றன. பக்திமார்க்கம் அநுஷ்டிப்பதற்குச் சுலபமானது; அநுஷ்டித்து இங்கேயே இறைவனை பிரத்தியக்ஷீகரிக்கும் ஆனந்தத்தை உடையது. வாங்கிக்கடைய முன் நிற்கும் யாவராலும் அநுஷ்டிக்கக் கூடியது; விறகைத் தீயாக்குவதும் மணியைக்கடைந்தெடுப்பதும் ஏனைய வழிகளுக்கு உதாரணங்கள். ஆகவே, அவை பக்தி வழிபோன்ற இலகுவான வழியல்ல என்பதும் அவை வழிச்செல் வோருக்கு இறைவனை உருவத்தோடு கண்டு இன்புறும் ஆனந்தம் இல்லை என்பதும் தெளிவாகின்ற தன்றோ?

# பெண்ணடியவர் மூவர்

## காரைக்காலம்மையார் சரிதத்தின் அரும்பொருள்கள்

[பண்டிதை - கிருஷ்ணவேணியம்மாள்]

(உ௲ரு-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்னும் அம்மையார் இறைவனை வணங்குவதற்குத் தன் உடல் அழகைப் போக்கிப் பேயுருவத்தைத் தாங்கினதினால் அறிவுடையோர் கடவுள் வழிபாட்டிற்கு உடம்பழகு பயனற்ற தெனவும் மனவழகே இன்றியமையாத தெனவுங் கொள்ளுவர் எனத் தெற்றெனப் புலப்படுகின்றது. ஆனால் “சுவரை வைத்துக்கொண்டே சித்திரம் எழுதவேண்டும்” என்பதற்கேற்ப, அறிவுடையோர் இறைவனை வழிபட்டு அவன் அருள் பெறுதற்கு வேண்டிய அளவு உடல் நலத்தைப் பேணுவரே யன்றிப் பல அவாக்களுக்கும் இடந் தருவதான உடலை, அருட்டிறத்தைப் போக்கத்தக்க தீய செய்கைகளினால் பெருக்குவதற்கு விரும்ப மாட்டார்கள். இதைக் குறித்தே நம் பொய்யாமொழிப் புலவர்,

“தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிதூ னுண்
ணெங்ஙன மாளு மருள்” [பா

என மொழிந்தனர்.

அங்ஙனமே அம்மையாரும் தன் அழகு மிக்க உருவத்தோடு பல இடங்கட்குஞ் சென்று இறைவனை வணங்குதற்கு இயலா தெனவும், யாவராலும் அஞ்சுதற்குரிய பேய் வடிவமே அதற்கேற்ற தெனவுங் கருதினார். இதை,

“கண்டவர் வியப்புற் றஞ்சிக் கையகன்
றோடு வார்கள்”

என்னும் அடியினால் சேக்கிழார் தெரிவித்தனர்.

ஏன் அம்மையார் பிறரால் அஞ்சத்தக்கப் பேய் வடிவமின்றி, பிறரால் விரும்பப்படாத வேறு ஏதேனும் ஒரு வடிவம் கொண்டு பல இடங்களுக்குஞ் சென்று இறைவனை வழிபடுதல் கூடாதெனச் சிலர் வினவலாம். பிறரால் அஞ்சத்தக்க பேய் வடிவமன்றி வேறு எந்த வடிவங் கொள்ளினும், அவரிடம் கடவுட் டன்மை இருக்கின்றதென உலகத்தார் அறிவரேல் அவரை விடாது தொடர்ந்து தங்கள் நன்மைகளுக்காக அவரைத் துன்புறுத்துவர். இதனால் அப்பெரியார் ஓய்ந்திருந்து இறைவனை வழிபடுதற்கும், தம் உள்ளத்தைத் தீயோர் கலப்பின்றித் தூய்மையாகவே வைத்துக் கொள்வதற்கும் இடந்தாமற் போகும். ஏனெனில் அறிவிலும், இறைவன் அருளைப் பெறுதலிலும் மிகச் சிறந்தவர்களாயிருப்பினும், தாங்கள் உயர்ந்த விடயங்களை மனதில் பதிய வைத்து அவைகளைப் பிறருக்கு அறிவுறுத்துங்காலந் தவிர தாங்கள் ஓய்ந்திருக்கும்போது, தன்னிலும் அறிவிற் குறைவுபட்டார் கூடியுள்ள இடத்தில் இருத்தல் கூடாதென்றும், அங்ஙனமிருப்பின், மற்றவர்களின் தீய எண்ணங்கள் தங்கள் மனதைத் தீய வழியில் ஈர்த்துக் கெடுத்து விடுமென்றும் அறிவு நூல்களிற் கூறப்பட்டுள்ளது. இதைப்பற்றியே நம் பெரியோர்களில் பலர் எப்போதும் உலகத்தார் இடையிலிருந்து துன்பப்பட

அஞ்சி சிறிது நேரமாயினும் தனித்திருக்க முயற்சிக்கின்றார்கள். ஆதலால் அம்மையார் எல்லாரும் தன்னைக் கண்டு பயந்தோடும்படியான பேய் உருவத்தைத் தாங்கினர். அம்மையார் பேய் வடிவம், மற்ற இழிந்த உலகப் பேய் வடிவங்களைப் போன்றதன்று. அவர் வடிவம் அருள் நிரம்பப்பெற்றதாகும். "அன்புடையார் என்பு முரியார் பிறர்க்கு" என்றபடி தன்உடம்பிலுள்ள தசையை நீக்கி அன்புநிறைந்த எலும்புருவாய் நின்றனர். தன் உடம்பிலுள்ள எலும்புகள் அன்பு மயமாய் மாற இறைவனை இறைஞ்சுபவர்கள், இனி இவ்வுலகில் எலும்பாலாகிய உடம்போடுபிறக்கமாட்டார்கள் எனத் தான் பாடிய அற்புதத் திருவந்தாதியில் கூறியுள்ளார். அஃதாவது,

"மதியா வடலவுணர்மாமதின்மூன் றட்ட
மதியார்வளர்சடையி னானை-மதியாலே
என்பாக்கை யாலிகழா தேத்துவரே லிவ்வுலகி
லென்பாக்கையாய்ப்பிறவா ரீண்டு"

என்பதாகும்.

பின் அம்மையார் சிவபிரான் வீற்றிருக்கும் வெள்ளி மலையைக் காலால் மிதித்துச் செல்லுதல் தகுதியுடையதல்லவென நினைத்துத் தலையாலே நடந்து சென்றனர். ஒவ்வொரு உறுப்பும் இறைவனாலேயே அளிக்கப்பட்டதாகவும், வேறு வேறு தொழில்களுக்குப் பயன்படக் கூடியதாகவு மிருப்பினும் எண்சா ணுடம்பிற்குச் சிரசே பிரதானம் என்றும்,

"கோளில் பொறியிற் குணமிலவே யெண்
குணத்தான்
றாளை வணங்காத் தலை" [குணத்தான்

என்றும் கூறியிருப்பதற்கேற்க, சிறந்த உறுப்பாகிய தலையாலே நடந்து சென்ற அவர் அன்பை என்னென்று கூறுவது! இதைக் கண்ட உமைப்பிராட்டியார் இவ்வாறு தலையாலே நடந்து வரும் என்புருவம் யாது என வினவ, சிவபிரான் இவள் நம்மைப் பேணும் அம்மையென்றும், இப்பெருமை சேர் வடிவத்தைத் தானே வேண்டிப் பெற்றனளென்றுங் கூறினார்.

இவ்வுலகில் மனிதர்கள், தங்களைப் போன்று காம, வெகுளி மயக்கங்களிற் சிக்குண்டு கிடக்கும் மற்றையோரால் பெரும்பயனடையக் கருதித் தன்னையும், தன் தலைவனையும் மறந்து நன்மை தீமைகளை நன்கு விளக்கப்படுத்துகின்ற தன்னுள்ளொளி (மனசாட்சி)யின்படி நடவாமல் இழிவையும், தீமையையும் தரத்தக்க பல காரியங்களைச் செய்து தன் பிறவிப் பயனைக் கெடுத்துக் கொள்ளுகின்றனர். அம்மையாரோ "இப்பெருமை சேர் வடிவத்தைத் தானே வேண்டிப் பெற்றார்" என எல்லாம் வல்ல இறைவன் வாக்கினாலேயே பெருமை என்னும் வார்த்தையைப் பெறுவதற்கேற்ற கீர்த்தி வாய்ந்து விளங்கினார். இவர், இறைவனால் "அம்மையே" என்றழைக்கப்படும் பெருஞ் சிறப்பையும், இவர் இறைவனை "அப்பா" என்றழைக்கும் பெருஞ் செல்வத்தையும் பெற்றனரெனில் இவர் அருட்டிறம் நம்மால் எடுத்துக்கூறும் தன்மையுடையதாகுமோ? இவர், ஒருவராலும் பெறுதற்கரிய இப்பெரும்பேற்றைப் பெற்றதனால்தான்,

"காலனையும்வென்றோங்கடுநரகங்கை
[கழன்றோ
மேலையிருவினையும்வேரறுத்தோம்-கோல
வாரணாவிந்தழியவெந்தீயம்பெய்தான்
சாரணாவிந்தங்கள்சார்ந்து"

எனப் பாடி மகிழ்ந்தனர்.



இதைக்கண்டு மகிழ்ந்த சிவபிரான், இவரை நோக்கி உமக்கென்ன வேண்டுமெனக் கேட்க, அம்மையார் உயிர்களுக்குச் சிறந்த பயனளிக்கக் கூடிய நான்கு பொருள்களைக் கேட்டனர். அஃதாவது,

1. இறவாத இன்ப அன்பு.

2. உலகிற் பிறவா திருத்தல்.

3. பிறப்பினும் இறைவனை என்றும் மறவா திருத்தல்.

4. சிவபிரான் ஆடும் அடியின் கீழிருத்தல்.

ஆகிய இந்நான்கேயாகும்.

அம்மையார் முதலில் அழியா இன்பத்தைத் தருகின்ற அன்புவேண்டும் என்றார். "என்று நீ அன்று நான் உன்னடிமை யல்லவோ" என்றவாறு பரமான்மாவைப் போன்றே ஜீவான்மாவும் அழிவற்றதாதலாலும் தொன்றுதொட்டு இரண்டிற்கும் நீங்காத சம்பந்த முண்டாதலாலும் இங்ஙனம் கூறினார். பெரும்பாலும் உலகத்தில் எறும்பு முதல் மானிடர் ஈறாக ஒவ்வொரு உயிரும் இன்பத்தை நாடியே பல முயற்சிகளையும் செய்கின்றது. ஆனால், அம்முயற்சிகள் பல முறைகளில் அவைகளின் கருத்திற்குமாறாக அப்போதோ, அன்றி சில நாட்கள் கழிந்தோ துன்பமாய் மாறி விடுகின்றன.

நிற்க, உலகில் அன்பில்லாத உயிரே இல்லையென்றும், அன்பு இல்லையானால் உலகமே இல்லையென்றுங் கூறலாம். கொடுஞ் செயல்களையுடைய புலி, சிங்கம் முதலிய காட்டு மிருகங்களும், தம் குட்டிகளின் மாட்டு அன்பு பாராட்டு கின்றன. இங்ஙனம் உயிரோடு தொடர்புற்ற அன்பை நம்மனோர்கள் நிலையற்ற பொருள்களிடத்தில் செலுத்திப் பின்பு துன்புறுகின்றனர். அத்துன்பத்தின் நிலைமையைத் தமக்கு மிக்க அன்புடையவரைப் பிரிந்து துக்கப்படும் ஒவ்வொருவரிடத்துங் காணலாம். இதை ஆசை அல்லது அவாவெனவுங் கூறலாம். இவ்வாசையே பிறப்பிற்கு விதையென்பதற்கு,

"அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்
தவாஅப் பிறப்பீனும் வித்து" [றும்

எனக் கூறியுள்ளது. ஆனால் நல்ல அறிவு, உயர உயர இவ்வன்பு சிறந்த வழியிற் செல்லு கின்றது. எங்ஙனமேனும் உலகத்திலுள்ள மக்கள், பொருள் ஆகிய இவைகள் மாட்டு செலுத்தும் அன்பு அழிந்துபோகக் கூடியதேயன்றி, இறைவனிடத்தில் செலுத்தும் அன்புபோல அழியாமல் இருக்கக்கூடிய தன்று. இறைவன் மாட்டு செலுத்துப் அன்பையே இறவாத அதாவது அழியாத அன்பு எனக் கூறுதல் வேண்டும். இதையே அம்மையார் விரும்பினார். இவ்வன்பைப் பெறுதற்கே ஆன்மலாபத்தை நாடிய அறிவிற் சிறந்த பெரியோர்கள் யாவரும் இறைவன் முன்னிலையில் தங்கள் குற்றங்களை முறையிட்டு மனங் கசிந்துருகி அழுதார்கள். அவர்களில் இரண்டொருவரை இங்கு கூறுவாம். மிக்க செல்வாக்குள்ள அரச வாழ்வையும், பெரிதென மதியாத குலசேகராழ்வார்,

"செடியாய வல்வினைகள்
தீர்க்குந் திருமாலே
நெடியானே வேங்கடவா
நின்கோயி லின்வாயல்

நம் வானவரு
மாம்பையருங் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துன்
பவளவாய்க் காண்பேனே "

என்றும்,

தன் தந்தையாகிய இரண்ய கசிபு, மலையிலிருந்து உருட்டுதல், விடம் கொடுத்தல் முதலிய ஒருவராலும் தாங்க முடியாத பல துன்பங்களைத் தனக்குச் செய்த காலத்தும், எல்லாம் வல்ல இறைவன் தன்னுள்ளே இருப்பதால் இத்துன்பங்கள் தன்னை யொன்றுமே செய்யாதென்னும் உறுதியான எண்ணத்தைக் கொண்டு மேன்மையடைந்த இளஞ்சிறுராகிய பிரகலாதர்,

" முன்பு பெறப் பெற்ற
பேறோ முடிவில்லை
பின்பு பெறும் பேறுமுண்டோ
பெறுகுவ னேல்
என்பு பெறாத இழிபிறவி
யெய்தி டினும்
அன்பு பெறுகை அரும்பே
றெனக் கென்றான் "

என்றும், சமணர்களால் பல துன்பங்களையும் அடைந்த திருநாவுக்கரசு சுவாமிகள், தனக்குச் சிவபிரான் திருநாமத்திலுள்ள அன்பே பல கொடிய துன்பங்களையும் போக்கும் என்பதற்கு,

"சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத்திருந்தடிபொருந்தக்கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே "

என்றும் போற்றி யுள்ளார். இதனைத் தான் அம்மையாரும் முதலில் அழியாத இன்ப அன்புவேண்டிப் பின்னர் பிறவா திருத்தலை விரும்பினர். இவ்வுலகில் பிறத்தல் பல துன்பங்கட்கும் காரணமாவதே யன்றி ஒருகால் இறைவனையும் மறப்பதற்கு இடந்தரு மாதலால் அதனை வேண்டாமென மறுத்தனர். இப்பிறப்பைப் பற்றிய துன்பங்களை நம் பெரியோர் பல படியால் விளக்கமாகக் கூறியுள்ளார்கள். அவைகளை விரிக்கிற் பெருகும்.

இன்னும் அம்மையார் மூன்றாவதாக, அடியாள் ஊழ்வினையால் பிறவியுண்டாயினும் உம்மை யென்றும் மறவாமல் உம்மாட்டு அன்பு கொண்டொழுகுதல் வேண்டும் என முதற் கூறியதே மற்றும் வற்புறுத்திக் கூறியுள்ளார்.

இங்ஙனம் இறைவனிடத்து அன்பு பூண்டொழுகுவது அவன் அருளைப் பெற்றுப் பிறவியை யொழிப்பதற்கே யாதலால், கடைசியாகப் பஞ்சகிருத்தியங்கள் செய்கின்ற தன்மையாய் நடிக்கின்ற சிவபெருமான் தூக்கிய அருள் நிறைந்த பாதத்தின் கீழிருக்க விரும்பினர். சிவபிரான் பஞ்சாட்சரத்தை உயிர்பட்டுக் காட்டவே நடிக்கின்றார் என்பதற்கு

" ஆடும் படிகேணல் லம்பலத்தா னையனே
நாடுந் திருவடியிலே நகரம்—கூடு
மகா முதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார் "

என உண்மை விளக்கத்தில் கூறியுள்ளது.

(தொடரும்)

18136

# மதிப்புரைகள்

"**காமாக்ஷி கல்யாணம்**":—காஞ்சி நாகலிங்க முனிவர் பதிப்பு. ராவ்சாகேப்-C. R. முருகேச முதலியார் அவர்கள் தரும வெளியீடு. இந்நூல் 212 கலித்துறைப் பாக்களால் ஆக்கப்பட்டது. ஆசிரியர் பெயர் விளங்கவில்லை. இரண்டே ஏட்டுப் பிரதிகள் கிடைத்தன. அவைகளைக்கொண்டு செப்பஞ் செய்து, சைவத்துக்கென தமது ஆயுள் முழுமையும் தொண்டுபுரியும் பதிப்பாசிரியர்—காஞ்சி நாகலிங்க முனிவர் இந்நூலை அச்சிட்டு வழங்குவது சிவபுண்ணியங்களுள் தலையாயது. வேண்டுவோர் சென்னைக் கீழ்ப்பாக்கம் "காமாக்ஷி விலாஸம்" என்ற பதிப்பாசிரியர் இருப்பிடத்துக்கு எழுதுக.

"**பிரசவ காலத்தில் முதல் உதவி**":—இந்நூல் 96 பக்கங்கொண்டது. விலை அணா 6. ஆசிரியர் டாக்டர் யூ. ராமராவ், 323, தம்புசெட்டித் தெரு, சென்னை. இது பொதுவாக எல்லா இல்லறத்தாரிடமும் இருக்கவேண்டிய நூல். இத்தகைய சிறு நூல்கள் பல இவ்வாசிரியர் இயற்றியுள்ளார். இவைகள் பொதுவாக அறிவை வளர்க்கும் தகுதியுடையனவாக இருக்கின்றன.

---

# சமாஜ அறிக்கைகள்

(1) சைவ மடாதிபதிகளைக் கண்டு சைவத் தொண்டுகள் புரியும் சபைகட்குப் பொருள் பெறுதற்கு ஒரு குழுவாகத் தங்கள் சொந்தச் செலவில் செல்ல விரும்புவோர் தங்கள் விலாசங்களையும் சௌகரியமான தேதிகளையும் உடனே தெரிவிக்க வேண்டுகிறோம்.

(2) சமாஜத்துக்குச் சேரவேண்டிய சந்தா பாக்கிகளை சாதாரண அங்கத்தவரும் ஆயுள் அங்கத்தவரும் விரைவில் செலுத்துமாறு வேண்டுகிறோம்.

(3) நம் சமாஜத்து ஆண்டு நிறைவுவிழா நடக்குமிடம், தலைவர், விழாவை யொட்டி ஒரு சைவர்மகாநாடு முதலியவைகளைப்பற்றித் தீர்மானிப்பதற்குச் சென்னை, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, 150-வது எண்ணுள்ள சமாஜ ஆபீஸில் நம் சமாஜஅங்கத்தினர் பொதுக்கூட்டம் ஒன்று 1929ஆ அக்டோபர்மீ 26வ சனிக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறும். அன்றைய தினம் தேவையுள்ள அங்கத்தினர் எண் (Quorum) இன்மையால் கூட்டம் நடைபெறாவிடில் மேற்படி விஷயங்களைத் தீர்மானிப்பதற்கு மேற்படி இடத்திலேயே 1929ஆ அக்டோபர்மீ 28வ திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு அக்கூட்டம் நடைபெறும். இப்பொதுக் கூட்டத்தில் பேச்சுரிமை, வாக்குரிமை, (Vote) முதலியன திருப்பாதிரிப்புலியூர் சைவர்மகாநாட்டு, ஒன்று முதல் நான்குவரையுள்ள உண்மைகளை ஒப்புக்கொள்ளும் அங்கத்தினருக்கே யுண்டென்பதை ஞாபக மூட்ட விரும்புகிறோம்.

(4) தலைவர் நியமனம் முதலியனபற்றி இவ்விதழில் 248-ம் பக்கத்திலுள்ள அறிக்கையையும் கண்ணுறுமாறு நமது வாசகர்களை வேண்டுகிறோம்.

(5) மற்றோரிடத்தில் வெளியிட்டுள்ள பரிசளிப்புக் கட்டுரை அறிக்கையின்படி அறிஞர் பலரும் மாணவர் பலரும் கட்டுரைகள் எழுதியனுப்புவர் என்று எதிர்பார்க்கிறோம்.

இங்ஙனம்:

10-10-29

ம. பாலசுப்ரஹ்மண்யம்,
காரியதரிசி, சைவசித்தாந்த மகா சமாஜம்.


முந்துங்கள்! விலை ரூ. 2-12-0 தான். ரூ. 2-12-0 தான்.

130 சாமான்கள் அடங்கிய ஜர்மன் பெட்டி

சாமான்களின் விவரம் :—14 காரட் ரோல்டு கோல்டு அழகிய நிப்புள்ள பவுண்டன் பேனா, ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2, ஷடி சர்ட் பொத்தான்கள் செட் 12, ஷடி கல்லிழைத்த புரூச் 1, ஜப்பான் நூதன பொம்மைகள் 6, நேர்த்தியான கத்தி 1, காமினேஷன் நூதன சாவி வளையமும் செயினும் 1, உயர்ந்த பென்சல்கள் 12, பென்சல் கிளிப்புடன் கூடிய கவர் 1, பலரகப் பென் ஹோல்டர்கள் 6, உயர்ந்த நிப்புகள் 12, மணிபர்ஸ் 1, ஜெர்மன் இங்கி புட்டி 1, இங்கி மாத்திரைகள் 12, செண்ட் புட்டி 1, தேசிய டிரான்ஸ்பர் படங்கள் 35, அழகிய பலரக சேப்டி பின்கள் 25 ஆக 130 சமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி 1-க்கு விலை ரூபா 2-12-0 தான்.



ஜினன் வாட்சு கம்பெனி, மிண்டு பில்டிங் மதராஸ்.



விலை ரூ. 2-14-0 விலை ரூ. 2-14-0

## நூதன கைத் தையல் மெஷின்

மேலே கண்ட விலை எமது அசல் விலை. சிலநாட்களுக்கு மட்டுமே இந்த விலைக்குக் கொடுக்கப்படும்.

இந்த மெஷின் புதிதாகக் கண்டுபிடிக்கப் பட்டது. இது ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியது. இந்த மெஷினால் எவரும் மாதம் 100 ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதிக்க வழியுண்டு. இதனால், மெத்தைகள், மேஜைத் துணிகள், கைக்குட்டைகள், ஜாக்கெட்டுகள், தாவணிகள், குழந்தை சொக்காய்கள், கிழிந்த ஆடைகள் தைக்கலாம். மஸ்லின் துணியிலும், மல் துணியிலும், புஷ்பங்கள் முதலிய சித்திர வேலைகள் வெகு அழகாகச்செய்யலாம். விலை 1-க்கு ரூ. 2-14-0. திருப்தி யில்லாவிடில் பணம் வாபீஸ்.

கனடியன் வாட்சு பீபிள், ஸோல் ஏஜண்ட்ஸ், ஜார்ஜ் டவுன், மதராஸ்.


# Prize Essay Competition for 1930

## 1930-வருஷம் கட்டுரைப் பரிசுகள்

**சைவ பரிபாலன சங்கம், தமிழ் மாணவர், பண்டிதர் இவர்களுக்கு இரண்டு பொற்பதக்கங்கள் பரிசு கொடுக்கப்படும்**

விஷயம் :—1. சிவாலயங்களின் இயல்பு; அவற்றை நாம் எவ்விதம் போற்றிப் பரிபாலனம் செய்ய வேண்டும்?

2. சைவமடங்களின் நிலை; அவை கெட்டு ஒழிந்துபோகாமல் பாதுகாத்து பரிபாலிப்பது எப்படி?

இவ்விஷயங்களைப் பற்றிச் சிறந்த கட்டுரைகள் எழுதியனுப்பும் மாணவர், அறிஞர், பண்டிதர் இவர்களுக்கு இரண்டு பொற்பதக்கங்கள் பரிசு அளிக்கப்படும்.

**நிபந்தனைகள்** :—1. கலாசாலைகளிலும் வெளியிலும் உள்ள எல்லா மாணவர், பண்டிதர், பண்டிதை, சாதிகுல சமயபேதமின்றி யாவரும் எழுதியனுப்பலாம். 2. அவற்றுள் மிகச் சிறந்ததாகக் காணப்படும கட்டுரைகளைப் பரிசுபெற்றவர்கள் பெயருடன் அச்சிட்டு சொற்ப விலைக்கு லோகோபகாரமாக விற்பனை செய்ய சங்கத்திற்கு உரிமையுண்டு. 3. ஒருவரே இரண்டு கட்டுரைப் பரிசுகளுக்கும் எழுதியனுப்பலாம். 1930 ஏப்ரல் முடிவுக்குள் அடியிற்கண்ட விலாசத்துக்குக் கட்டுரைகள் அனுப்பப்படுதல் வேண்டும்.

I. C. ஈசுவரன் பிள்ளை,

தென்னாடு, சைவபரிபாலன சங்கம், திருக்குற்றாலம், திருநெல்வேலி ஜில்லா.


Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, 150, Govindappa Naicken Street, G. T. Madras.